# தேளூர்ந்த நாடகம்


பதிப்பாளர்

சி. அருணா



தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை - 600 005.

2007

# தேரூர்ந்த நாடகம்

*"சுவடியியலும் பதிப்பியலும்"*
*பட்டயப் பேற்றிற்காகச்*
*சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு*
*அளிக்கப்படும் பதிப்பேடு*


பதிப்பாளர்

**சி. அருணா**



**தமிழ் இலக்கியத்துறை**

**சென்னைப் பல்லைக்கழகம்**

**சென்னை - 600 005.**

**ஆகஸ்ட் - 2007**

“சுவடியலும் பதிப்பியலும்”
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் ஆய்வேடு
எண்: 53010603

# நெறியாளர் சான்றிதழ்

**வீ. அரசு,**
பேராசிரியர் - துறைத்தலைவர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறையில் நடைபெற்று வரும் சுவடியியலும் பதிப்பியலும் பட்டயப்பேற்றிற்காக 'தேரூர்ந்த நாடகம்' என்னும் தலைப்பிலான சுவடியை **சி. அருணா** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்பு செய்தார் என்றும் இந்த ஆய்வேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்,

(வீ. அரசு)

நாள்: - -2007
இடம்: சென்னை-5.

# பதிப்பாளர் உறுதிமொழி

**சி. அருணா**
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

**சுவடியியலும் பதிப்பியலும்** என்னும் பட்டயப் பேற்றிற்காக சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறைக்கு அளிக்கப்பெறும 'தேரூர்ந்த நாடகம்' என்னும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

ஆய்வாளர்,

(சி.அருணா)

நாள்: - -2007
இடம்: சென்னை-5.

## உள்ளடக்கம்


| | பக்கம் |
| --- | --- |
| நன்றியுரை | 1–2 |
| பதிப்புரை | 3–5 |
| தேரூர்ந்த நாடகம் | 6–80 |
| துணைநூற்பட்டியல் | 81 |
| சுவடியின் முகப்பு பக்கம் | |

# நன்றியுரை

சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும், **'சுவடியியலும் பதிப்பியலும்'** என்ற பட்டயப்படிப்பில் சேர்வதற்கு வாய்ப்பளித்த தமிழ் இலக்கியத்துறை தலைவரும், மற்றும் என் நெறியாளருமான பேராசிரியர் **வீ. அரசு** அவர்களுக்கு என் முதற்கண் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இப்படிப்பில் எனக்கு பயிற்சியளித்த பேராசிரியர் ய. மணிகண்டன்அவர்களுக்கும் நன்றியினை உரியதாக்குகிறேன். பின் எனது ஆய்வேட்டிற்காக நான் தேர்ந்தெடுப்பதற்காகக் கேட்கும் போதெல்லாம் எனக்கு சுவடியினை எடுத்துதவிய அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்திற்கும் நன்றியினைக் கூறுகின்றேன்.

பட்டயப் படிப்பில் சேர்ந்த நாள் முதல் ஆய்வேடு கையில் வரும்வரையில் என்னுடன் இருந்து உதவிய நண்பர்கள் ப. ரேவதி, கோ.கணேஷ், இரா. ஜீவானந்தம் ஆகியோருக்கும் என் நன்றியினை இந்நூல் வழி தெரிவிக்கிறேன்.

மேலும், இதில் சேர்வதற்கு ஊக்கமளித்த என் குடும்பத்தினர் அனைவருக்கும், மற்றும் என்னுடன் பயணித்த தொடர்வண்டி நண்பர்களுக்கும் மனமார்ந்த நன்றியினைச் சமர்ப்பிக்கிறேன்.

இவ்வாய்வேடு முழு நூல் வடிவம் கொடுத்த ‘டுடே கிராஃபிக்ஸ்’ நிறுவனத்தார்க்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சி. அருணா

# பதிப்புரை

நான் ‘சுவடியியலும் பதிப்பியலும்’ என்ற பட்டயப் படிப்பின் ஆய்வேடாக ‘தேரூர்ந்த நாடகம்’ என்ற தலைப்பில் சுவடியினைத் தேர்ந்தெடுத்துள்ளேன். அதனால் நாடகத்தினைப் பற்றி சிறு முன்னுரையினை இங்கு எழுதுகிறேன்.

நாடகத்தினைப் பற்றி தமிழ் இலக்கியத்தில் தொல்காப்பியம் முதல் இன்று வரை பல மாறுதல்களையும், வளர்ச்சியினையும் பெற்று வந்துள்ளது. தொல்காப்பியம் என்ற இலக்கண நூலில்,

“நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்.....”

என்ற அடியாலும், பின் சங்க இலக்கியத்தில் ஆற்றுப்படை நூல்களிலும், கலித்தொகை, பரிபாடல் போன்றவைகளிலும் நாடகப் பாங்கினைக் காண முடியும். மேலும், இதன் வளர்ச்சி சிலப்பதிகார காவியத்தில் காணலாம். இதில் ஒரு மிகப் பெரிய பிரம்மாண்டமான நீட்சியினைக் காணமுடியும். சிலம்புக்குப் பிறகு, நீண்ட கால இடைவெளிகளுக்கு பின் சிற்றிலக்கியங்களில் இதன் தொடர்பினைக் காண முடியும்.

சிற்றிலக்கியங்களில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் போன்ற நாடகங்கள் வளர்ச்சியினைக் காணலாம். நாடகத்தின் மறுமலர்ச்சி காலம் என்றே கூறலாம். இவ்வகையில் தேரூர்ந்த நாடகம் கி.பி. 18, 19 ம் நூற்றாண்டுகளில் தோன்றியிருக்கலாம். இந்நாடகத்தினைத் தேர்ந்தெடுக்கக் காரணம், நூல் வடிவில் உள்ள நாடகங்களை வாசிப்பதற்கும், சுவடியில் உள்ள நாடகத்தினை வாசிப்பதற்கும் உள்ள வேறுபாட்டினைத் தெரிந்து கொள்ளவே ஆகும்.

இச்சுவடி அரசினர் கீழ்த்திசைச்சுவடி நூலகத்தில் டி.டி.287 என்ற எண்ணில் கிடைத்தது. இதன் யாப்பு ஆனது விருத்தம், வசனம், உரைநடை என்ற வடிவத்தில் உள்ளது. இதனை வாசிக்கும் போது எனக்கு ஏற்பட்ட சிக்கலானது, அதில் கூட்டெழுத்துக்கள் இருந்தது ஆகும்.

**அக்கூட்டெழுத்துக்கள் :** 

போன்றவைகள். “இத்தேரூர்ந்த நாடகமானது ஓர் மன்னராட்சியில் மக்களுக்கு எந்தவொரு பிரச்சினையும் இன்றி, நலமுடன் வாழ விரும்பும் மன்னன், தன் குடிமக்களுக்காக ஓர் அறச்சபையினை நிறுவ நினைத்து, அதற்கான ஆலோசனைகளைத் தன்னுடன் சபையில்

வீற்றிருக்கும் பலரிடம் கேட்டும், அச்சபைக் கட்டினால், பின் வரக்கூடிய மக்களின் பிரதிபலிப்பினையும் அறிந்து செயல்படுபவனாக இருக்கிறது".

இந்நாடகத்தினைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் 'தக்கோலம்' என்ற கிராமத்தில் உள்ள தட்சிணாமூர்த்தி மடத்தில் உள்ள சுவடியினையும், பின் சென்னையில் செம்மஞ்சேரியில் உள்ள ஆசிய நிறுவனத்தில் உள்ள சுவடியினையும் கண்டு திருப்தியின்மையால் இக்கீழ்த்திசை நூலகத்தில் தேடி, இதனை எடுத்தேன்.

இச்சுவடியில் சில பாடல்களும் இறுதியும் சில சிதிலமடைந்துள்ளன. அதனால் பதிப்பிப்பதற்கும் சிக்கல் ஏற்பட்டாலும், ஒரு சில அனுபவங்கள் கிடைத்துள்ளன. இதன் ஊடாக எனக்கு சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே. சாமிநாதையர் போன்றோரின் பதிப்பு பணி குறித்த பிரக்ஞை ஏற்பட்டது.

இவர்களின் பணி அளப்பரியது. மேலும் சுவடியிலிருந்து அச்சேற்றுதலுக்கான புரிதல் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு புத்தக உருவாக்கத் துறை தொடர்பான அறிமுகம் ஏற்பட்டுள்ளது என்றே கூறலாம்.

# தேரூர்ந்த நாடகம்

## காப்பு

எண்மையுள் மல்லர்(ன்) மார்க்கு இலக்கையும் வணிபட்டாடை
வண்மையாய் கொடுத்து நீயும் வளமுடனேகச் செய்வாய்

## காட்சி - 1

**பங்கு கொள்வோர்:** பெரியவன், சின்னவன், கட்டியன், மந்திரி, ராசா, பெரிய மந்திரி.

**இடம்** : சபை

**பெரியவன் சின்னவனுக்கு:**

திடமிகுஞ் சபையில் என்முன் சம்பிறமாய் மிகவுமொங்கி
சுடரது எயில விள(ல)ங்குஞ் சுந்திர புகலக் கேளாய்!
குடஞ் செய்த மல்லர்(ன்) மார்க்கு குறைவில்லா வெகுமானங்கள்
திடமுடன் கொடுக்க நீயும் செப்புவாய் செப்புவாயே!

**சின்னவன் கட்டியனுக்கு:**

சுழில சூழல் கிலசசேதி துலக்கமாய் அறிந்து வந்து
தாழ்வில்லாது என்முன் நின்று சாத்துங் கட்டியனே. கேளாய்
கேழ்(ள்)வியுள்(ள) மல்லரோங்கி கிளைத்திட வெகுமானங்கள்
வாழ்வே கொடுத்து நீயும் வையகம் மெச்ச செய்வாய்

**ராசா கம்மாவர் அழைக்க:**

மெய்க்கு மென்முகந்தன்னில் விளங்கிடுஞ்

சேதியெல்லாம் பக்குவ

மாயயெனக்கு பகர்ந்திடும் அமைச்சே! கேளாய்!

திக்குள்ளோர் புகழ் நீதி செய்மணி கட்ட வேணும்

அகச்சாலையர் யிப்போ அழைத்திட செய்குவீரே

**பெரிய மந்திரி சின்னவனுக்கு**

அந்தணர் முனிவோர்கெல்லாம் அள்ளியாட கங்களியும்

சுந்தரர் புகலக் கேளாய்! சுகமுடன் உன்னி வாழும்

சிந்தை செய் அகச் சாலைத்து வரை மிகவும் யிப்போ

உந்தனர் விட்டோடிய அழைக்கச் செய்வாய்

**சின்னவன் கட்டியனுக்கு:**

சொல்லரும் புகழ் பேத தொங்கும் சுரதமுளர்சனவாசல்

வல்ல கட்டியனே! கேளாய்! வாதுடனோடு இருங்கள்

யெல்லையில் வாழும் அகச்சாலையர் தன்னையெல்லாம்

நல்மொழி உரைத்துக் கூட்டி நளச்சபை அழைத்து வாராய்

**காட்சி - 2**

**பங்கு கொள்வோர்** - கட்டியன, மந்திரி, கம்மாளர், ராசா, கன்னார்

**இடம்** - சபை

**கட்டியன் மந்திரிக்கு:**

நிறச்சபை தனிலழைக்க நவுண்டிடும் அமைச்சே! உந்தன்
பொற் சரணத்துள் நன்றாய்புகழ்ந்து நான்
பணிந்தேனய்யா!
மெச்ச மாயமொழிகள் கூர்ந்து பண்புடன் கன்னார்
தன்னை
யிஷசேணம் அழைத்துக் கொன்று யியல்புடன்
வந்தேனய்யா!

**கம்மாளர் வருகிற சபை:**

ஆரம் பூண்டிலங்கு மன்னர் அவனியில் மகிழ்ந்து வாழ்த்த
ஆரமார்பிலங்குஞ் சோழன் அகமகிழ சபைக்கி அனபாய
ஆரமே மேனில் பூசி ஆடையுங் குலங்க கட்டி
ஆரங் கைய்யாகும் அகச் சாலையர் அங்கு வந்தாரே

**கம்மாளர் வருகிற தரு:**

அகச்சாலையர் மெய்க்கப் பணி பூன்று அரசன் சபையில்
வந்தார்
மெய்யக்கவே திருனித்து குழைச்சிட்டு மேலார்ப் பொட்டு
மிட்டு
திக்குள்ளோர் புகழ் அகச் சாலையர் திகழ்சபை வந்தாரே
அங்கமாக தங்க ஆழியணிந்துக் கைய்யாரங்க்
கழுத்திலிட்டு

மிக சுங்குடன் யினசேர் மனதுலங்கவே சோழன் சபையில்
வந்தார்
முளரிபோல முக்கோளி ஓங்கவே முபபுரினாலாட நல்ல
கேளாத மான கல்வி பேசி கையவீசியே திகழ்சபை
வந்தாரே
கென்னியிலுன்னித பாதிந்தரித்த செம்பட்டு உடை
உடுத்தி நல்ல
உன்னிதமாய் சோழ ராசன் சபைனாடி ஒயிலுடன் வந்தாரே
அகச் சாலையர் மெய்க்கப் பணிபூண்று அரசன் சபையில்
வந்தார்

**கம்மாளர் ராசாவுக்கு:**

திங்களும் மும்மாரி பேய தேரமும் தழைத்து ஓங்க
தோங்கு தலபூண்டிர் மன்னர் சூழ்ந்துமே பணிந்து போற்ற
அங்கமென்றோரைச் சார்ந்தும் அரசனே அடி பணிந்தோம்
யெங்களை அழைத்தவாறு யின்னதேணடிய மாவீரே

**ராசா கன்னார்க்கு:**

யிமர வரனென்று கேட்டயெனது கம்மியரே கேளாய்
அயன் தரித்த யீ(ஈ)சா அமரரும் அரசர் வாழ்த்த
பயம் அறமனுக்களோங்க ராசாளு வேணும்
நயம்பட நீயும் அணிமணி வரத்து வாராய்

**கன்னார் ராசாவுக்கு**

மணிய தூய்மைக்கச் சாத்தும் மன்னரே உலகு கெல்லாம்
பணியவே அரசாளய்யா, பாதமே பணிந்தோம் நாங்கள்
அணிமிகும் அரசராரும் அனைவரும் மகிழ் நன்றாய்
வணிதமாய் மணியுமாத்து கொன்று நான் வரேனய்யா

**காட்சி - 3**

**பங்கு கொள்வோர்** - ராசா, பெரிய மந்திரி, சின்ன மந்திரி, சின்னவன், கட்டியன், தூதர்

**இடம்** - நகரத்திலிருந்து சபைக்கு

**ராசா நகர் விசாரித்த**

சுத்த விரங்கள் பேசும் சுமுக மந்திரியே! கேளாய்!
யித்தமெல்லாம் நீதியியல்புடன் விளங்கக்கேட்டு
மத்த உளர தன்னில் நீதி வகுத்திடுஞ் சேதி கேழ்த்த
ஒற்றனர் அனுப்பி நீயும் உளவருந்துரைக்கச் செய்வாய்

**பெரிய மந்திரி சின்னவனுக்கு**

கொத்தவன் மகிழ்நாளும் குணமுடன் யிசைகள் கூட்டி
சுத்த மாயமொழிகள் கூறும் சுந்திராய் புகலக்கேளாய்
மத்த நல்லூரில்லெங்கும் வகுத்திடுங் சேதி கேழ்த்த
ஒற்றனர் அனுப்பி நீயும் உள வருந்துரைக்கச் செய்வாய்

**சின்னமந்திரி**

வெத்தி சேர் மன்னன் நாளும் விளம்பிடும் வார்த்தை
அனபாய
பத்தியாய் யெதிரே நின்று பகருங் கட்டியனே கேளாய்
யித்தலந்தன்னில் வாழும் யெழில் மிகுந் தூதர் தன்னை
சித்தமே உகந்து நீங்கள் சித்திரம் அழைத்தி வாராய்

**கட்டியன் தூதருக்கு**

ஒத்தனை புகலக் கேளாய் ஓங்கியே வாழுமெங்கள்
கொத்தவன் மகிழ்ந்து உன்னை கூட்டியே வரவே
சொன்னார்
கத்தி (ஆ)யாயுதங்கள் கட்டி கைதனில் பிரம்பு தாங்கி
வெத்தி சேர் சபை; முன்னே மெய்ப்புடனேகுவாயே!

**தூதர் வருகிற சபை**

கைய்யினில் பிரம்பு தாங்கி கத்தி கேடையமுந் தொட்டு
மெய்தனில் அங்கி பூண்று மிக நூதல் திலந்தீட்டி
அய்ய மாமொழிகள் பேசி அரசனார் சபையை நாடி
வைய்யகத் திரியுந் தூதர் வந்துமே தோனினாரே!

**தூதர் வருகிற தரு**

கையதனிலொத்தப் பிரம்பெடுத்து கடுகத் தூதரும்
வந்தாரே

மெய்தனில் அங்கினிசாறு தொடுத்து மெய்ப்புடன்
மார்பினில் ஆரம்விடுத்து
தையலர் கண்டு அதிர மையலர்கள் மிஞ்ச
தரிக்கிடுந் திங்கெண தோமென
நெத்தியில் கஷ்(ஸ்)த்தூரிப் பொட்டு மிலங்க நிலவுகள்
போல
கையகடையம் விளங்கத்திய கச்சையும் சுங்குங்
திகழ்த்தும் தக்குமிகுமியெனவே
கழுத்தரும் வார்(ற்)த்தை மிக்க பேசி கைய்யூ ஒயிலாய்
பய்யவே வீசி தகழ் திகழ் சபையில் சேதிகள் கூற
தரிலிடு திரிகிடு தங்கென தோமென கையதனிலொத்த

**தூதன் மந்திரிக்கு**

அய்யனே1 அரனே1 யிந்த அவனியில் மனுக்களெல்லாம்ங
துய்யனே பணிந்தேன் போற்றும் சுரதமுளம் சேவீர்!
மெய் மகிழ்ந்தோடி வந்த விளம்பினார் வரஞ்சொல்லி
செய்யனேஅழைத்தவாறு சித்தம் வைத்தாளுவீரே

**சின்ன மந்திரி நகர் விசாரித்த**

மன மகிழ்ந்தோடி வந்த வல்ல தூதுவரே! னா(நா) ட்டில்
கனம் பெருஞ் சோழரான கட்டளைப் படியே நீங்கள்
யினமுடன் நகரமெல்லாம் யியம்புவாரறிந்து மேம்
சனம் புகழ் சபையில் வந்து சாத்துவீர்! சாத்துவீரே!

**தூதர் பொற் சபை**

அக மகிழாடை பூண்று அன்புடன் இருவரங்கூடிக் கை
மிகுஞ் சோழ ராசன் தனக்குமே செல்லும் நா(னா)ட்டில்
விகரமாய் விளங்கு மனிதி மிகவுமே அறிந்து வந்து
பகரவே தூதரிப்போ பாங்குடன் புறப்பட்டாரே

**தூதர்பொற்தரு**

நாங்களும் யெகுவோமே தகர சோதிக்க
நாங்களுயெகுவோமே;
நாங்களும் யெகுவோம் ராசருககே சொல்லும்
ஓங்கிய சோழ நாட்டில் உளவு மிக வறிய
நாங்களும் யடனந்தன்னி பகரந்திடுந்தியை திடமாய்
கேட்டுரை செப்புவேந்தர் இப்போ - நாங்களும்
வனங்களஞ்சே கலையும் மனுவளர் நகரமும்
விளங்குஞ் சேதியறிந்துவே நகர திரைக்கவே
நாங்களு - தண்ணீர் திடாகமும் சரவடி
தன்னிலும் நின்றுஉளவறிய யிண்ணா யெழிலாக்
நாங்களுயெகுவோமே-நகர்சேர்த்திதக்க
நாங்களுயெகுவோமே

## காட்சி - 4

பங்கு கொள்வோர் - கன்னார், ராசா

இடம் - சபை

**மணிகொன்றுவருகிற சபை**

கண்டமே பிடித்த மன்னர், கருதியே நிகழும் போர்க்க
கண்டமாள சோழ ராசன் கட்டளைப் படியே அஞ்சி
கண்டத்தில் வாழுங் கன்ர் - கலி மிக மணியுங்கொன்று
கண்டத்தில் ஆரம்பூசி கருமையுள சபையில் வந்தார்

**கன்னார் வருகிற தரு**

தானத் தன்ன தான....

வானோர் முனிவர் நித்தம் வந்து தொழு மாலூரில்
வாழும் ஆன கம்மியர் மணி அங்கமுடன் கொண்டிங் தூது
வந்தார்
ஆராவிச்சிய மணியொன்று ஆயிரஞ்சேரினில்
வரத்துமே கொன்று போர்ச்சீமையாள மன்ன
புகழ்ந்திட கன்னார் தூது வந்தார் - தன்னந்
ஆசைபோலே மணியும் ஆரும் புகழ் விதி இலக்கொன்று
ஓசை கோஷ்ட்டம் அதிர ஒளி திகழும் பலமிதில் வந்தார்-
தான

**கன்னார் ராசாவுக்கு**

அணிமிகு மன்னர் வாழ்த்த அவனியில் வாழ் மனுக்குப்
பணில் மொண்டில்லாக் காரறுக்கும் பார்த்திபாய
பணிந்தேனய்யா
வணிக மாஉரை தப்பாமல் மகாசபையோர்கள் மெய்க்க
மணியெழிலாக வாரத்து கொண்டிங்கு வந்தோமைய்யா

**ராசா மினியை கன்னார்**

காத்திடாயென்று நன்றாய் கருதும் கம்மியரே
மெத்த நெத்தியாயிருந்து இப்போ நீயுமென் சாவல்
தன்னில்
யெத்த முள்ளோரும் யின்னம் ஏழையுமறிய மேள
வாத்திய
முழக்கத்தோடு மனிதனைக் கட்டி வாராய்!

**கன்னார் ராசாவுக்கு**

கட்டிவாயென்று சாத்தும் கருமைசேரய்யா தங்கள்
இஷ்டமுள்ளுரை தப்பாமல் யேதியேகி வாசல் தன்னில்
திட்டமாய்த் தூண்கள் நாட்டி சீருடன் மணியெயிப்போ
சட்டமாய்க் கட்டி வந்து தகைபதம் பணிவேனய்யா

**ராசா பெரிய மந்திரிக்கு**

மந்திரி சுமுகா கேளாய் வாசலில்ச் சென்று நீயும்
அந்தமாயத் தூண் நிறத்தி ஆராஷ்ச்சிய மணியைக் கட்டி

யெந்தன் நாடெங்கும் நன்றாய் யிருபறை போட்டு வந்து
வந்துமே யெனதுச் சேதி வகுத்திடா வகுத்திடாயே

**மந்திரி ராசவுக்கு**

வகுத்துடாய் யென்று சாத்தும மகாமுடி மன்னர் தங்கள்
மிகுத்த பொற்ப்பாதந் தன்னில் மிகவு ந்தான்
பணிந்தேனய்யா
நகுத்த தலபடியே யானும் நலமணி கூட்டி நாட்டில்
பகறத்தகும் பறையும் போட்டு வந்து நான் பணிகுவேன்

**மணி கட்டின சபை**

பொழில்மிகு ராசா! ராசா போகியும் அமரர் போற்றும்
பொழில் மிகச் சூழ்ஆருரில் புனிதரித்த ராசாள மன்னன்
பொழியினுள் மனுக்களோங்க பூசுரர மகிழ்ந்து தங்க
பொழில் மகிழ் சபையில் திதி புகழ் மணி கட்டினாரே

**பெரிய மந்திரி கட்டியனுக்கு**

சொல்லுமுன் ஏவல் செய்து தொழுது என்னருகில் நிறத்து
வல்ல கட்டியனே! மன்னன் வகுத்த சொல் படியே செய்ய
யெல்லையிலோடி நீயும் யெழில் பெறுந் தழுத்தந்தன்னை
நில்ல நேரங்குடா - மல் நிமிஷத்தில் அழைத்து வாராய்

**கட்டியன் மந்திரிக்கு**

வருகுவாயென்று சாத்தும் மதி மிகு அமைச்சே! உந்தன்
தருமிகு பாதமீதில் தயவுடன் பணிந்தேனய்யா

மருமிகு நாட்டில் வாழும் வளம் பெறுந்தமுத்தந்தன்னை
திருமிகு சமுகத் தன்னில் சினத்தினில் அழைத்தவாறே

காட்சி - 5

பங்கு கொள்வோர் - தமுத்தன், மந்திரி, கட்டியன், ராசா, சின்னவன்

இடம் - தமுத்தன் சபை

**தமுத்தன் வருகிற சபை**

நயடனறு பூசி ஞ் சங்க நறிப்பாகு கட்டி துப்பற
உடையும் பூண்று தோளினித்த முத்து மாட்டி
மெய்ப்புகழ் சபையில் நன்றாய் விளங்கிடுஞ் சேதி
கேழ்த்த நற்ப்புகழ் வேலனிப்போ நலமுடன் தோணிரே

**தமுத்தன் வருகிற தரு**

நெத்தியில் பொட்டுங் கைம் அவித்த கடையமும்
நிலவிகள் போலே விளங்க நல்ல
வேத்தி சேர் மன்னன் மகிழ்த்த மிக்கிடும்
மெய்வேலர் வந்தானே.
சோதி போலங்கி துலங்க மெய்யிலிட்டு
தோளில் தத்முக்கிமிட்டு நல்ல
விதியில் லாரும் மகிழ்த்தமுக்கிடும்
மெய் வேலன் வந்தானே

மண்டலத்தில் மனும் மகிழ்ந்தி சோழன்
மன்னவன் தன் சபைக்கு யிப்போ
கண்டறிய வென்று கழுத்தில்
தமுத்திட்டு கணவலன் வந்தானே

**தமுத்தன் மந்திரிக்கு**

குகடி மிகு மன்னர் மெஞ்சும் நிறத்திக்
கொண்ட அமைச்சே தங்கள்
வடி மிகு பாதந் தன்னில் மருதினான்
பணிந்தேன் - தூதர்
கடியவே யென்னை வாவென்று
கடுதினார் ஓடி வந்தேன்
அடியேனை அழைத்த சேதி
அங்கமாய் உரைசெய்வீரே

**மந்திரி தமுத்தனுக்கு**

அங்கமாய் உரைக்க சாத்தும் அறிவுள்ள தமுத்தாய் கேளாய்!
திங்கள்தன் முக்வில் உசனத்தீரன் சொல்ப்படியே நிதம்
மங்களமாக வாழும் மான கரரேங்கும் நன்றாய்
யிங்கித தமுக்கும் போட்டு யியலுடன் ஓடிவாறாய்

தமுத்திடன் வாறசபை

மன்னவன் வாசல்ந்தன்னில் மனு நீதி ஓங்கயின்று
கன்ன சொல் மச்சனி கட்டளைபடியே வேலன்
யின்னகர மெங்கு நன்றாய் யியல்புடன் தமுக்குட் போட
நன்னைய வீரரோடும் நலமுடன் தோனினாரே!

தமுக்கு போறவாற தரு

நன்னனானா நன்னனான னான நன்ன
அந்தமோடு ஆரூர் தன்னில் வாழும் நீங்களருந்
தமுக்கிடுஞ் சேதி அனம் பாய கேளுங்கோள்
சுந்தரமுள சோழ ராசன் வாசல் - நீதி
துலங்க ஆருஷசி மணி தூக்கியிருக்குது.
சஞ்சலமும் சண்டைசாரியானால் வந்து
தடையற மணியடி கூந்தான விசாரிக்க
கஞ்ச வதனமுள சோழ ராசன் மணிகட்டி
வைத்தா ஆரும் உளரிலக் கருதி வாழுங்கோள்
திங்கள் மும்மாரிகள் ளெங்கும் பேய நன்றாய்
தேசமுஞ் சேரி பங்களும் தினமுமோங்க
அங்க மில்லா மனுயெங்கு வாழ்க மணி
அரசன் வைத்ததென்டு அனபாய பாருங்கோள்
நேர்மையாக ஆரூர் தன்னில் வாழும் எங்கள்

நீதியுள்ள சோழ ராசன் நேர் மொழிகளை
பார் மீதிலேதமுக்கிட படி நீங்கள்ளாடு
மகிழ்ந்து நிதிக்குள்ள (அ)னபாய நடங்கோள்

வசனம்

ராசாதிராசன்,ராச உத்தண்டன், ராச கெம்பீரன்
சோழமகாராசன், வாசலிலே நீதிமணிக்கட்டிக்
கொண்டிருக்கும் சகலரும் நீயுங்கொள்

தமுக்கன் மந்திரி

அய்யனே நீதிமார்க்கம் அளித்திடும் அமைச்சே தங்கள்
மெய் மலர் பாதந்தன்னில் மிகவு (நா)னான்
பணிந்தேனய்யா
வையகம் மெங்கு நன்றாய் மகா தமுக்கிட்டு வந்தேன்
செய்யும் வாரேனக்கு யின்னம் சித்தம் வைத்தருள
செய்வீரே

மந்திரி கட்டியனுக்கு

வாகுடன் யென் முன்னிண்டு வையகமனுக்கு சேதி
ஆகமாயுரைக்கு பெந்த அரிய கட்டியனே கேளாய்
தாகமாய் ஓடி நாட்டில் தமுக்கிட வேன்னனுக்கு
யேகவே வெகு மானங்கள் (ஈ)ந்துமே அனுப்புவாயே

கட்டியன் மந்திரிக்கு

அனுப்புவானென்று சாத்தும் அமைச்சனே (ஈ)னீன
பரத்தில்
மனுப்புகழ் பணிந்தேன், தங்கள் வாக்கு தலபடியே
யிப்போ
தனுப் புகழ் மன்னர் மெய்க்க தமுக்கிட வேலனுக்கு
யினிப் புகழ் வெகுமானங்கள் யி(ஈ)ந்துமே
அனுப்புவேனோ

மந்திரி ராசாவுக்கு

கெண்ண மூளம்(ச்) சேதங்கள் திருவறான் படியே யானும்
பண்ண வர் முனிவர் வாழ்த்த பாருள்ளோரிய நாட்டில்
வண்ணமாய் தமுக்குமிட்டு வாசலில் மணியுங்கட்டி
எண்ண நலநீதி ஓங்க யேகினான் வந்தேனய்யா

ராசா மந்திரிக்கு

வந்தேன் னென்று சாத்தும்மன மிகு சுமுகா கேளாய்
அந்தனை போலே மந்திரி உலாசினான் கண்டத்தில்லை
கந்த மோடணிப் பட்டாடை நம்மியர்க் கீந்து யின்னம்
அந்த முள் காடில்க் கொஞ்சம் அகரமுயிதுவாயே

மந்திரி சின்னவனுக்கு

மதியினில் மிகுந்த வேத்தி மந்திரி சுந்தரனே கேளாய்
அதி(ச)செயமான அக்கசாலையார் அகத்துக்கு/ஏ

பூதிய பட்டாடை ஆரம் புகழவே மிகவும் யின்னம்
பதிதனில் கொஞ்சமிந்து பாங்குடன் வாழச் செய்வீர்

**சின்னவன் கட்டியனுக்கு**

அலை கடல் சூழ்ந்த தேசம் அதிலுள்ள சேதியெல்லாம்
நடமுடனதாந்த தேனங்குந்துலுங் கட்டியனேகேளாய்
பலபயணி பட்டாடை பாங்குடன் கன்னார் கிப்பே
திலதுமா கோடுத் துணியும் சீத்திர் அனுப்புவாயே

**கட்டியன் மந்திரிக்கு**

அணி மன உய்யச் சாத்தும் அமைச்சனே (நி)னின்
பாதத்தில்
தணிவுடன் பணிந்தேனய்யா சாத்து தரபடியேயானும்
மணி மிகு அணி பட்டாடை வளமுடன் கன்னார் ரிந்து
பிணி தரித்தாகச் மெய்க்க போகவே செய்வேனய்யா

**ராசா பாளையக்காரர் அழைக்க**

அலகிலாப் புகழ் சேர் எந்தன் அமைச்சனே நமக்கு
செல்லும்
உலகெல்லா பாதி காவல் உகத்துமே காறக்கும் நல்ல
பிலமுள்ள அரசன் தன்னை போய் அழைத்திடவே தூதர்
நலமுடன் (அ)னுப்ப நீயும் நவலுவர் நவலுவாயே!

**பெரியவன் சின்னவனுக்கு**

நீதி சேர்கன வாசல் நேர்மைகள் றாந்து பாத்து
ஊதியத்துடனே வாழும் உகந்த சுந்தரனே கேளாய்
மேதினி யெங்குங் காவல் விளங்கவே அரசு செய்யும்
பாதியக்காரன் தன்னை பருவுடன் அழைக்கச் செய்வாய்

**சின்னவன் கட்டியனுக்கு**

சாளம் புடித்தமன்னர் தருமைய நிகதமும் வாழ்த்த
நிள வளதுரைகள் கேட்டு நிகழ்த்துங் கட்டியனே கேளாய்
வாளுடன் கடகந்தொட்டு வலுமையா காவலாளும்
பாளையக்காரன் தன்னை பண்புடன் அழைப்பாயே

காட்சி - 6

**பங்குகொள்வோர்** :பாளையக்காரன், ராசன், தலையாரி

**இடம்** : பாளையக்காரன் சபை

**பாளையக்காரன் வார சபை**

முரச திர் வெடிகெளம்ப மேள வாத்திய முழங்க
வரிசையுடன் கோடி சவளம் வண்ணமா சூழ்ந்துலங்க
பரிசையுங் கத்தியொடுங் பரிசானத்தவர்கள் சூழ்
அரசு காவலனுங் காண் அம்பலம் தனில் வந்தானே

**பாளையக்காரன் விற்ற தரு**

பொன்னொளி பணிகளிட்டு புவிமனு
புகழ்ந்து மயங்கியே அங்கி தொட்டு

பண்ண பாடவிட்டெ குதிரைமேல்
பாளையக்காரன் தோனினானே
வேந்தர்கள் மகிழ்ந்திடவே உலகில்
வாழு வீரர் நடுங்கியே ஒதிங்கிடவே
பரந்தமாமொழி பேசி குதிரைமேல்
பாளையக்காரனுந் தோனினானே
யெதிர் வெடி மோளத்துடன் சங்கிதம்
யெங்கு முழங்கவே வீரத்துடன்
குதிரை மேல் லேறிக்கொண்டு
பாளையக்கார்ன் ஆங்கே தோனினானே!
பாளையக்காரன் ராசாவுக்கு
விருதுகள் சில தொடுத்து படைமனுமேவி உலாவே மிக
விடுத்து
கருதுடும் சபை யடுத்து பாளையகாரன் சபை தனில்
தோனினானே
கருவினைசேர் ராசன் சாக ரிதியேனித முமெத்த
அருண நலகுலத்துதித்து அரசனே அடியேன்யின்று
சருனமே பணிந்தேன் தூதர் சாத்தினார்வரவேயிப்போ
தருணமாம் அழைத்த சேதி சாத்துவீர்! சாத்துவீரே!

**ராசா பாளையக்காரனுக்கு**

பரதியகாறா கேளாய்! பாரில் மனுக்கள் ளோங்கி
ஊழியத்துடனே வாழு உருமணி சபையில் னாட்டி
மேதினியோர்க்குத் தோன மேயிதமுக்கிட்டு வந்தோம்
நீதியு விளங்கத்தானே நீ அரசாளுவாயே!

**பாளையக்காரன் ராசாவுக்கு**

பறையிட்டு வந்தோயின்றும் தரந்திடும் அரசே தங்கள்
மறைதமிழ் பாத மிதில் யானுமே பணிந்தேனய்யா
மறைகளு மகிழ்ந்து வாழ்த்தமனுக்கூறு மிகவே யெத்த
குறைவில்லா அரசு காவல் குணமுடன் செய்வேனய்யா

**பாளையக்காரன் தலையாரிக்கு தரு**

மன்னவன் சோழ ராசன் வகுத்தசொல் உரை தப்பாம
யென்னுட காவலுக்கு யிசந்த காறு வறு செய்ய
பொன்னப் பாளையக்கா! கேளாய், போதியன் வீரப்பன்
போத்தன
தன்னுடன் சொல்லிக் காவல்சட்டமாகாறக்க செய்வாய்

**சபை**

படியதிரவே பரிமேல்லேறி பரித்த படாவும் யெடுத்துக்
கொண்டு
கடியவே படை சூழ் பாதிக்காறன்னஆத்துக்கு யேகினான்

பொன்னிசூழலகு தன்னில் பேர் பெறும் சோழனான்
மன்னவன் நீதிக்கு சிவன்தனில் பசுவுங் வேங்கை
வின்னபேதகம் பண்ணாமல் மெய்யன்புடன் உறவுக் கூடி
தண்ணியுங் கடித்துக் கொண்டு ஒருதடத்தினில்
படுத்துதய்யா

## காட்சி : 7

பங்குகொள்வோர் : வேட்டைக்காரன், தூதன், ராசா,
மந்திரி, பெரியவன், சின்னவன், கட்டியன்

இடம் : வேட்டைக்காரன்சபை

பசுவும் புலியும் வறுமை நீக்கியே
பாளனாசன் நிதிக்கஞ்சியே திசையெங்கு
புகழ்ந்தோடி மேய்ந்து பாத செழிக்க தன்னிரும்
குடித்ததே
சினவிலம்பு அப்புறு தோணியும் சில்லககோலுங்
யென்மானப் புடித்தம் கண்ணி வரைகளும் மெடுத்துக்
கொண்டு

**வேட்டைக்காரன் வர்ற சபை:**

வானவாருர்வு செய்யும் வரையெல்லாம் வேட்டையாடும்
கானகர் வேடர்தாண்டிகலகண்டு தவந்தானே

வந்தார் வந்தாரே வனவேடர் வந்தார் வந்தாரே
சந்தானத்துடனே பயிட்டுடிந்தா கூட்டமட்டே
வந்தார் வந்தாரேவனவேடன்

**வேட்டைக்காரர் வர்ற தரு**

ஒட்டுசல்ல டங்களு யிடையினில் யிட்டுயேதட்டிக்
கட்டி கொட்டி கெட்டியினவே கிட்டி கிட்டி வந்தான் -
வந்தார் வந்தாரே
கொண்டையில் பூனத்துஞ்சுங் குரங்கவே
கொச்சால்ஞ்சூட்டி
வேண்டைய ங்காலிட்டும் வனவேடன் மெய்ப்புடன்
தோனினானே
அக்குவடம் பூண்டு முதுகில் அப்புறு தோளியிட்டு
மெய்ககவேனேத் திமிலே திலதமும் வேடிக்கையாகயிட்டு
வந்தார் வந்தானே
காடை கூரி விகத்துங்கவுதாரி காக்கட்டா சிட்டு காளு
மாடபிறவுறீங்
உயில் மயில் மான் பாடியுங் கொண்டு
வக்காக கொக்குளுங் மாடையான வல்லத்துபஷ்சி களுங்
னோக்காள ஒழியெணறே வனவேடர் ஓடியுபேசிக்
கொன்றே - வந்தார் வந்தாரே வேடன்

கண்டிரோ வேடனாரே காட்டில் வாழ் புலி பசுவும்
ஒன்றதாய்க் கூடி மேய்ந்து ஒயிலுடன் இருக்குறிந்த
மண்டலம் ராசார் வேந்தன் மாகா நிதி காணும் பொல்லா
சூண்டைகள் வருங்காண வேட்டையாடல்ந்
தகுவரதய்யா

**வேட்டக்காரன் வசனம்**

அகோவரரும் அண்ணமாரே தம்பி மார்களே அனேகம் ராசாக்களுடைய னாடுனாக்கப சேர்ந்தவனங்களிலேயும் மலையடி வாரத்திலேயுங், அடாத வேட்டைகளில்லையிதோயிந்த வனத்திலே புலியும் பசுவுங் கூடி மேய்ந்து - கண்டாய் தண்ணீர் குடிக்கிற வயனந் தெரிய சொல்லவேனு அண்ணமாகளே வேடன்

ஒன்றாய் கூடி மேயுற புதுமை கேட்ட
வலிவுள்ள அண்ண மாரே மகா சோழன்னாடாங்கண்டாய்
கலியுந் தன்னிலிந்த காரணங் கண்டதில்லை
மெலிவுடன் யிவ்விடம் விட்டு மறும் வனம் மேகுவோமே

**வசனம்**

அகோவரரும் அண்ணமாரே பூலோகத்திலே சேரன் சோழன் பாண்டியனென்று மூனு ராசாக்களிலோடு

சோழன் மண்டலமேன்டும், மனுநீதி கண்ட சோழனென்டும் கேழ்வி பட்டோடும் அது தானிது வெண்டுதோணபடுகிற படியினாலே யிந்த வனத்திலே வேட்டையாட கூடாது மறுவனம் போவோ அண்ணமாகளே!

தூதன் வருகிற சபை

(நா)னாட்டில் செண்ட தூதன் நலமுடன் ஓடி யேங்கும்
வாட்டமொன்றில்லாச் சோழன் மனுநீதியதனைப் பாத்து
காட்டில் வரச்சே வேங்கை கமலையோடுவாய் கூட்டி
நாட்டம் வாழ்க கன்று ராசானோடுரைக்க வந்தான்

தூதன் வருகிற சபை

கண்டசேதி உரைக்க கடுக நடை நடந்து
மண்டலம் புகழுந் தூதர் வந்து தோணினான்
சென்னல் விளைங்கண்டு செழித்த மனுவைக்க கண்டு
மன்னர்க்குரைக்க தூதன் வந்து தோனினான்.
பதியெங்கு ஓடி செண்டு மாவித்தோவுங் கண்டு
அதிசெயம் சொல்ல தூதர் அனபாய தோணிணான்
குளத்து புலி பசுவும் கூடி தண்ணீர் குடிக்க
வனத்தில் கண்டு தூதரும் வந்து தோணிணான்
சற்ப்பமுங்கிரியும் யின்று சதிளய வாழ்வதுங்கண்டு
ஒப்புடன் வேந்தர்க்குரைக்க ஓடியே வந்தார்

**தூதர் ராசனுக்கு**

(நா)னாட்டினில் மனுப்புகழக சேனாங்கள்ளோடி
(நா)னாலு திக்கும் நயந்து நகரில் வந்து
வாட்டமில்லா மனுதரையுங் மிகவுங் கண்டு வாட்ட
வளருஞ் செல்ல தை பாத்து மனங்கள் திறந்து
காட்டில் வரும் போதாவங் கீரியோடும்
கலந்திறவாய் நின்றாடவுங் கண்டோமேறும்
தாஷ்ட்டகமுள் புலி பசுவுங் கூடி சலங்
குடிக்கண்டு வந்தோம் சறணமய்யா

**ராசா மந்திரிக்கு**

காட்டினில்ப் பசுவு வேங்கை கலந்துறவாடுதென்று
கேட்டு (நா)னான் மகிழ்ந்தேன் தூதர்க்கி விளைத்திட
வெகுமானங்கள்
தேட்டமாயணியுப் பட்டாடை செம்பொன்னு
மிகவே யிந்து
வாட்டமொன்று ரைத்திடாமல் மகிழ்ந்திடயேக செய்வாய்

**பெரியவன் சின்னவனுக்கு**

திட்டியப் புகழ் சேர்கிறததி செல்வமுமோங்கி வாழும்
வாட்டமொன்றில்லாமன்னன் மனமிகு அமைச்சே கேளாய்
னாட்டினிலுள் வறிந்து நவுண்ட தூதுவர்க்கு ஆடை
தேட்டமாக கொடுத்து நீயும் சிருடன் அனுப்புவாயே

**சின்னவன் கட்டியனுக்கு**

வெற்ப்பினில் மிகுந்த தோளான் வேந்தர்கள் மகிழ்ந்து
வாழ்த்தும்
அற்புதமான வேந்தன் அரியக் கட்டியனே கேளாய்
சொல்படி வறு தூதர் சுகமுடன் ஊருக்கேக
நற்பணியாடையிந்து நலனமுடன் அனுப்புவாயே

**கட்டியன் மந்திரிக்கு**

ஆடை களிய சாத்தும் அமைச்சனே! நீன் பாதத்தை
தேடியே பணிந்தேன் தங்கள் திருளவறுள்படியே யானும்
மாட மாளியிலுள்ள மன்னவன் மகிழ்த்த தூதர்
சோடை கத்துடனேயேக கறுக்குடன் னீயுவேனே

**கட்டியன் வசனம்**

சறணம் சறணமய்யா சுவாமி கோடி சூரியம் பொருந்து யிருக்கப் படாநிண்டசபை யோர்கள் நியதக்கதாக அஞ்சு வெகுமானமுங் குடுத்து அனுப்புவேனய்யா சுவாமி

**காட்சி - 8**

பங்கு கொள்வோர் - குங்குமேந்தி, ராசா, மந்திரி, சுந்தரன், சின்னவன், பெரியவன்

**சபை**

அத்தி மாமுகனை நித்தம் அனுதினம் துதித்துப் போத்தும்
பத்தியாம் சோழராசன் பாவையும் அகத்திருந்து
நித்திரைதன்னில் புள்ளை யீனவு மிகவே கண்டு
புத்திரன் தன்னை வேண்டியெழுந்து மே புலம்பலுத்தாள்

**குங்குமேந்தி சோபனம்**

வண்டணிதுளபம் பூண்ட மாமணி மகுடத்தோனே
யின்று றாத்திரி தான் புள்ளை யிண்டெடுத்து போலயானே
கண்டசோரப் பணத்தையெண்ணி கலங்குது சீத்தானும்
மண்டலம் அளந்த மாயான் வரமே எனக்கருள செய்வீரே

**குங்குமமேந்தி தோத்திரம்**

ஆதியே அரனே அகண்ட பூற னே
சோதியே சுடரே சூழ்ழொளி விளக்கே
பாதியே பரனே பங்கையத்தம்மால்
நீதியே செல்வநிறை கடல்வாழ்வே
வேதனாயகனே விண்ணவர்கோவே
பூதலம் படைத்த புனிதனாரணனே
யெதுனானறியேன் யிரவில் சொற்ப்பணங்கள்
காதலாய் பிள்ளையின் னான் கண்டேன

மெய்யருள் தானோ மேதினியோடும்
வைய்யகத்தொருமலடியென்று ரைக்க
நய்யுதெதிரெகம் - நான்முகம் படைப்போன்
உய்யவே அடியாள் ஒரு பிள்ளை யாகிலும்
தாளைய அரனே தய்யல் பங்காளா
பேளய உலகம் புகழ்ந்திடமே துதிக்க
(நா)னா(ரா)றாயணனே - (நா)னால்மறைப்பொருளே
சீறாய் உது திருவடி தொழுதேன்
மண்டலந்தனிலே மன்னவர் துதிக்க
அண்ட னாயகனே அடியவர்க்கொளிவே
கண்ட சொற்பணடும் கை மேல் பலனாய்
குங்குமகேந்தி பறனி
யின்றுமே யெனக்கு யிதுவே வரமாய்
யெனக்கருள் புரிய்யீரஞ்சினேன் பாதம்
னாறாயணனே னான்முனே
னால்மறை வேதத்துள் பொறுளே!
ஓரார்முகனே பெத்தவனே
உளங்களிக்கூற மகமறுளீர்!
கனியாயிடையில் தரித்தவனே - கல்விக்கூர் செகண்ணா
பணிவேன் உனையான் வேறுயில்லை பாலன்வரமே
தருவீர்

துயில் போல்எனது கனவுதனில் தோண் மனபடியே
சுதனுக்கு
இயல்வா கொடுத்து யெனை யாள யிசா கிறுபையே
புரிவாய்

தரதிகுங்குமகேந்தி

யென்னுடதாயே! அம்மா யித்தனிது யாமென்னா
மன்னவாழிந்தாலேனான் மனதிலே கோபங்கொள்வாற்
சொன்ன சொல் தவறினேனோ - துன் வார்த்தை யெதிர்
சொன்னேனோ
அன்னமே னானுப்போ அறிந்திட உரையும்மா
சோதித்தும் தாதித்தும் தர்க்கம்
அறிவுரையேன் வேண்ட அனவினையரே கேளாய்
சேதியென் சொன்னாலிப்ப சின்னமரம்மா
சின்னமென தெண்ணியேச் செப்பாதிருந்தாலே
உன் மனம் மாருக்கு வெளியாகும்மா
வெளியாகுமோ வென்று விதபமாய் கேழ்த்துறாய்
ஒளியாமல்யான் யினி உறைக்கிறேனம்மா
உரைத்தாலதுக்கு வகை உண்மைகள் சொல்லுவேன்
திரைத்தகுமான சோழனந் தேவியெம்ம
ராசாத்திதாதிக்கி

பாங்கில் அதிகமான பாவையே பகர கேளாய்
தூங்கையில் மைந்தன் சொற்பணங்கண்டேன்
செங்கோல் தாங்கிய அரசாள ளெந்தன் தலைவனுக்கிந்த
சேதி
நீங்களும் னானுமாக நிகழ்ததயே வருவோம் வாறாய்

**குங்குமகேந்திதரு**

தாதிமாரே பாங்கியே னான் கண்ட கனாவை
எந்தன் தலைவனுடனே உரைத்து தான் வருவோம் வாய
ஆதிசிவன் மாயமோ (நா)னான் ஒன்றறிகிலேன்
யிதுயெது புதுமையோபாராய் என்ன செய்குவேன்
மண்ணுள்ளோறகள் பேச மலடாயிருந்தேனேயான்
யிண்ணுங் கண்ட சொற்பனமே யெதறிகிலேன்
என்னைக் கொண்ட பத்தா வுத்து வயதுமே யாச்சு
யீகா யிதுவரைக்கும் புத்திரனீ பாத்திருந்தாரே

**குங்குமகேந்தி விருது**

மெத்தபுந் தகையே ஓங்கி விளங்கிடும் அரசே எந்தன்
கொத்தவர் உனது பாதம் குனிந்த அடி பணிந்தேனய்யா
நித்திரை தன்னில் மைந்தன் னின்னான் கண்டேன்
ராத்திரி
கறத்தனார் ஆரூரானெக்கு தியே வருவோம் வாறாய்

**குங்குமகேந்திக்கி ராசா**

கருதிட நினைந்தளந்தன் கனம் பெறுங் குங்குமகேந்தி
யிருபெரு மனையில்ச் சென்று எழில் மிக அலங்கல் பூன்று
அழுதுள்ள ஆரூராற்த்து ஆடை ஆபறணங் கொன்று
உருமையாய் கோவில்ச் சென்று உகந்து னாம்
வருகுவோமே

**ராசா மந்திரிக்கி**

எனது (நா)னாட்டில் செழிந்து வாழ் மனுக்கு நீதி
கேடு வராமல்ச் செய்யூ கேழ்வியுள்ள அமைச்சே கேளாய்
யாகேசர் கோவில் யானும் வரனோ
தேடு நற்ப்பாதம் போத்தி வரவோம் செழிக்க வாறாய்

**மந்திரி ராசாவுக்கு**

வருகுவாயென்று கேட்ட மனமிகும் அரசே உந்தன்
பெருகுசீர் பாதந்தன்னில் புகழ்ந்து யான் பணிந்தேனய்யா
மருமிகு ஆரூரான தன மலர்பாதம் சேர்த்தி செய்து
உருமையாயடியேன்கூட உகந்து யான் வரவேனய்யா

**மந்திரி சுந்தரனுக்கு**

விரிமலர் துடை புன் மன்னர்மெச்சு பலசபையில் னாளும்
அரிபத மறவா நல்ல ஆய்ந்த சுந்தரனே கேளாய்
வரிமழ வைத்தோல்பூணும் மகாதேவரைப் பணிந்து
வாறோம்

பரிவுடனியுமிந்த பார் ராசாளுவாயே

**சின்னவன் பெரியவனுக்கு**

யிருந்திட்டாயென்று சாத்தும் எழில் பெறும் அமைச்சே
உந்தன்

திருந்து நல்பாதந்தன்னில் சென்னி தாழ் பணிந்தேனய்யா

வகுந்து தலப்படியே யானும் வளமுடன் அரசு செய்வனே

பொருந்தி சீராருரானே போத்தியே வருவீரய்யால்

**ராசா அரமனைக்கு போற தருகியால்**

பெண்ணே வாரும் நமது அரமணைக்கெங் கேகுவோம்
யின்று

மின்னல் பூஷ்ண மணிந்தாடுந்

தியாகாக்(ஆ) காபறணங்கொண்டு

யீசனாரடி பணிந்தேத் தவருனாம் மிருபெருமெழிவோம்

பாசமாய் மைந்தனுக்காக ஆரூரான் பாதமே தொழுவோம்

செய்யிழையேமுத்தாபறணமரெற தினமாலையும் பூண்று

மைவிழியார் கமலனாயகியாள் பாதமே வென்று

தஞ்சமென்று தியாகேசாதாளினையை அஞ்சலேன்
றுடுவோம்

வஞ்சினை திறத்தம் ஆரூரான் மலர் பதத்தை வணங்கி

நின்றாடுவோம் பொண்ணே!

**வசனம்**

அகோவரரும் பொண்ணே குங்குகேந்தினாமளயிரு பேரு அரமணையே போம் அலங்கிறுத் செய்துக் கொன்று தியாகாஆருக்கு ஆடைஆபரங்கொன்று யிருபேரும் வருவோம் - வாரும் பெண்ணே

**சபை**

மந்திரின் மேல் சிந்தை வைத்து மனவிசாத்து
மன்னவனுங் கொலுமிக விட்டிறங்கி அனபாய
முள்ள அருமையருந் தானுமாக ஆரூரான் தனைத்
தொழ வேண்ட கத்திலச் சென்று
வந்திடு மின்னான் அறிந்து உவனை வானவரை
வரவழைத்து மிக தேவரனப்பாய்
ரெந்தி மகிழ்ந் தேவருடன் சோழன் கீர்த்தி
புகலவே நின்வு கொண்டார் புனிதனாரும்

**காட்சி - 9**

பங்கு கொள்வோர் : சிவன், குண்டோதரன்
இடம் : சிவன் சபை

**சிவன் கொலுவிலிருந்து சபை**

மந்திர கிரிவாழ் ஈசன் மனம் அது மகிழ்ந்து தானே
நந்தியும் முன்னேதோணந்த முகசாலை தன்னில்

சுந்திர யேவல் செய்து தொழுங் குண்டோதரனுசூழ்
குந்தளம் முமையாளோடுங் கொலுவினி
லிருந்தாரனப்பாய்

**குண்டோதரன்**

யெந்தையே பரனேபோத்தி! யெவ்வுயிர்க்குரிரே போற்றி!
தந்தையும் தாயுமான சதாசிவப் பொருளே போற்றி!
மந்திரி கிரியில் வாழும் வானவர் முதலே போற்றி!
உந்த நர்ப்பாத னாளும் உகந்ததடி பணிந்தேன் போற்றி!

**சிவன் குண்டோதரனுக்கு**

போத்து மென் நம்கீழ் நின்று புகழ்ந்துமே
வணங்கியேத்தி
தோத்திர மிகவும் செய்து தொழுங் குண்டோதரனே
கேளாய்!
(நா)னாத்திசை யதனாள்த் தேவர் நமன் முதல்
மார்ரெல்லாம்
காத்திரமான யெந்தன் கனகசபை வர செய்வாயே!

**வசனம்**

அகோரவரரும் பிள்ளாய்! குண்டோதரனே யின்று கொடி
ஸூரீயப்
பிரகாசம் பொருந்தியந் முகசாலை மண்டபத்தில்

விஷ்ணு முதலாகிய சகலமான தேவர்களும் வரத்தக்கதாக உரை செய்து வாரும் பிள்ளாய்! அப்படியே நல்லதுய்யா சுவாமி!

**குண்டோதரன்**

அத்தனே அரனே தங்களறவு தலபடியே யானும்
மெத்தவே தேவலோகத்தில் விளங்கிடும் அமரரெல்லாம்
கொத்த வனத்திரு கூட்டங்கள் கூடவே சொன்னா ரெண்டு
பத்தியா உரைகள் சாத்தி வந்துமே பணிவேனய்யா

**குண்டோதரன் வருகிற சபை**

யிகபரமிரண்க் காண்யெழில் பெரும் ஈசனார் தனந்த
முகசாலை தன்னில் நன்மையா தேவர் கூட
பகலவன் முதல் வானோரும் படிவரும் வரவே காத்த
அக மகிழ்ந்தே குண்டோதரனுமே அத வந்தாரே

**தொடையம்தரு**

குண்டோதரனுந் தோணினான் புகழ் கூறிதோ
குண்டோதரனும் தோணினான்
குண்டோதரன் தோணினான் யின்று அரன்சபைக்கி
மண்டம் புனையமார் வரவே சாத்தயெழிலாய்
மாலயன் முனிதேவர் வானோர்திக்கு பாலரும்

சாலமாக வேத்திருச்சபை கூவே உரைத்து
குண்டோதரா! மறிமழ வாளி சூலி மதிவேகி
காபாலி மாலி குறி நேத்திரமுள்ள அரன் செப்புதல்ப்
படியே செய்யூ குண்டோ
நெத்தியில் வெண்நிறு பூசி, நிறைமார் ஆரமும் யிசி
அத்தனார் அரன் சபைப்கி அமரர் வரவே
சாத்த குண்டோதரனும்

**வசனம்**

சறண சறணமய்யா சுவாமி! விஷ்ணு முதலாகிய
தேவர்கள்ளெல்லாரும், கயிலாச கிரியில் நகமுகசாலை
மண்டபத்தில் ஆதிபரமேவீ பரன் ருள படிக்கி
வந்து கூடவேணுமய்யா சுவாமி!

**குண்டோதரன் சிவனுக்கு**

அத்தனே அரனே போற்றி அறவுதலபடியே யானும்
மெத்தவே தேவலோகத்தில் விளங்கிடும்அமரர் ரெல்லாம்
கொத்தவன் திருக்கூட்டங்கள் கூடவே சொன்னார்
பத்தியா உரைத்து வந்து பாதமே பணிந்தேனய்யா

**வசனம்**

அந்தபடியே சகலமான தேவருக்கும் திருகூட்டத்துக்கு
நகமுகசரலைக்கி வரசச் சொல்லி வந்தேனய்யா சுவாமீ!

## காட்சி - 10

**பங்கு கொள்வோர்: துவார பாலகாள், பிள்ளையார், மகாவிஷ்ணு, ராம்ம தேவர், தேவேந்திரன்**

**துவார் பாலகாள் வருகிற சபை**

சிரமதில் மகும் சூடித் தெண் டொளி விண்ணுலாக
கரங்களில் பாம்புமதொண்கழ் கோழ்ம் பணியுபூண்டு
சுரங்களும் மிகவே பேசி துதிக்கும் வீரரைப்போல
பரமனார் சபைக்கி துப்பா பாலகாள் தோணினாரே!

**தொடையத்த**

பாலகாள் வந்தார் - துபார பாலகாள் வந்தார்
பாலகாள் வந்தாரே படியேழ் திரவே
மாலமுள்ளீசன் வாழ்வாசல்க் காவால்க்காற - பாலகாள்
மத்தமேல் மகுடம் தகதகென்ன வணிந்தரும் வடமும்
மெத்த ஒளி காதினில் விளங்க குண்டலமிட்டு
அத்தனை சபைக்கி வரஅனபாய்யிவர்கள் கூடி - பாலகாள்
அரையில்ச் சல்லடமும் - யிட்டுமே தட்டி அழகாய் கட்டியது
உரமரத்தெண்டுமே கைய்யிலூணிக் கொண்டேழிலாக
சுரமும் கல்வியும் பேசி குலிவாசலுக்கிதோ - பாலகாள்

யிருகையியல் பாம்பும் பளபளளென்ன - யெழில் பேசும்
வீம்பு

சுருதிபோல மெய்யும் மின்னது வறாய் உடையும்

துன்னயோர் தியையெரித்தான் யினம்ப மகிழும் நல்ல -
பாலகாள்

**தோத்திரம் விருத்தம்**

கங்கையை ஒளித்தாய் போற்றி!

கபாலமும் மெடுத்தாய் போற்றி!

திங்களை உகந்தாய் போற்றி!

சேவெறு மானாபோற்றி!

செங்கையில் மழுவாய் போற்றி!

திருபரத்தனா போற்றி!

யெங்களை உகந்தாள் போற்றி!

யென் பிரான் பாதம் போற்றி!

**பிள்ளையார் சபை**

அந்தையுள் மனுக்களாரும் ஐங்கான் தன்னை அனபாய்

சிந்தையில் நினை திறப்பார் தேசிகனவருமனபாய்

விந்தியாப் பணிகள் பூண்டு வினை ஆகுமிதிலேறி

தந்தை தனத்தில் தோங்கித் தான் கணபடுதான் வந்தாரே

**தொடையும்**

கணபதி வந்தார் வரந்தரும் கணபதி பந்தார்
கணபதி வந்தாரென் கலியும் வினையகத்த
மணமிக சிகூ நல்மகாசபை தனைனாடி - கணபதி

**மகாவிஷ்ணு வருகுற சபை**

வடிவெடுத்துத் திசை தரத்து மைந்தனாகி
வரியடைத்து அசுரரரின் மேல் வாளியேவி
மடியடித்து விபூணரக்கு வாழ்வும் நல்கி
வானவர்க்குப் பயந்தித்து வாழ்விச் செய்து
அடியவர்க்குப் புவிமீதில் கருணை கூர்ந்து
அகவாமல் அகந்தனிலே சூடியாகுன்ற
படியளந்த திருமாலும் யீசர் வாழும்
பம்பல் மிகுஞ் சபை தனிலித வந்தாரே

**தொடையத்தரு**

தன்னாத்தன்னால் திருமாலெழிலாய் மனம்
வைத்தருமையுள்ள
சிவனார் தனையே யிதமோத்துட பணிய
சிரமேல் முடியணிந்து தருமைப் பணி மிகுந்து
திகழும் பம்பல் மீதில் அழகுட வந்தார் தன்னாதன்னால்
அகிலமலை யொரடிய பாததேழிலாக அசுரக்குல
வேரறுத்து தமரபயந்தித்த

அரியு மனமகிழ்ந்து சுரிகை மிக உகந்து

தரியைப் பரிச் செய்த நண்பன் சபையை னாடி தன்னா

தன்னில்

அலையாழியின் மேலுர்க் மதி துயிலும்

மடியாக கறும் மறுத்தம்மா ஆதிபகவான்

அரன்சபைதனில் முந்தி சலஞ் சக்கரமும் மேத்தி

பிறவித் தொழ அமரர் அக மகிழ்ந்தொழிலாக

தன்னா தன்னா

**போற்றி**

கறை கொண்ட கண்டாய் போற்றி!

காமனைக் கடிந்தாய் போற்றி!

மூறை கொண்ட வல்லாய் போற்றி!

வானவர் முதலே போற்றி!

பொறை கொண்ட சடையா போற்றி!

புரமெரித்தருளேபோற்றி!

நிறை கொண்ட சபையாய் மேலும்

மடுருபனே போற்றி போற்றி!

**சிவன் வசனம்**

அகோவரரும் மகா விஷ்ணுவோ யிங்கே யெழுந்தருளும்

சிந்திதையும் வண்றுற விசிரை மண்டூ கம்

**இராம்ம தேவர்வருகிற சபை**

சினைக்கு முதற்தெவ்வு யிர்க்கும் திற்றதமாக
விந்தையுடன் விதித்த விதி வெறுகாமல்
மேதினியோர் மனமகிழ் மிகவுங் கொண்டு
அந்திவண்ணன் தனை துதிக்க அங்கமா
அணி உகந்து பலகலை னாலாதியேந்தி
உந்திலுதிதொன் மிகவும் அமரர் போற்றும்
ஒளிமிகும் அம்பலம் தனிலித வந்தாரே!

**தொடையழகு**

செகம் படைத்தவரே வந்தனமா வணங்கி
குறுமையுள்ளயன
ரிங்கிதமாய் மகிழ்ந்து சிரமேல் முடியணிந்து
சித்தமே மிக மொழிந்து முதலா மிகப்பணியரோ
ஒளிவுடனித வந்தார் - தன்ன தந்தன்னா
முகங்கள் னாங்குடனே அங்கயில் வேதமுங் கொன்று
கிறுமையுள்ளர்னாம் பலமே உகந்தயின்
முன்னமிதலிலா பூசி முடையு மெய்யினி வீசி
முரசும் மிகவு பேசி வரிசையாயித வந்தார்
தன்ன தந்தன்னா

**தோத்திரம்**

அறிவினிலு யந்தாய் போற்றி!

ஆர்வுந் முகந்தாய் போற்றி!

மறிமழவானே போற்றி!

வயரி தோல் புனைந்தாய் போற்றி!

திரிபுரமெரித்தாய் போற்றி!

தேவர் னாயகனே போற்றி!

எறியுகந்தய்யா போற்றி!

எம்பிரான் போற்றி போற்றி!

**சிவன் வசனம்**

அகோவரரும் விறும்ம தேவரோ யிங்கே யெழுந்தளான்

**தேவேந்திரன் வருகிற சபை**

மன்ன மன்னவர்கள் போற்

வானவர்கள் முனவர் வாழ்த்த

பொன்னகரகிறவன் னென்று புகழ்ந்தேவேந்திர ராசன்

நன்னயபாணிகள் பூண்று நலந்த முனிவர் சூழ்

மின்னொளிக்கிதையும் தாங்கி விமலநற்ச்சபை வந்தார்

**தொடை தரு**

வேந்திரதி வேந்தன் மிக மகிழ்ந் தேவேந்திரனும்

தோணினான்

யெந்தலதகும் சத்திரிழிகள் மிகச் சூழ்ந்திலங்க ஒயிலாக
வர
மிந்து ரேஷ் சித்தாளும் ஈசன் சபைக்கியிதோ சம்பறமுமாக
சென்னியிலுன்னி தவன்ன முடிதேடி தேவர் கொன்னபாக
- நல்ல
வன்னியேந்தீசர் மகா சபைக்கிப்போ மனமுமிகவாக
ஆரங்கண்ணன் அயின்னி கேழ் வன அனிமாரி நீயோங்கி
நிதம் சாயுங் கதிர் வன போல் லிலங்க சிதை தன் கையிலே
தாங்கி திங்கள்ந் தீயையும் சிறும் புலியையுழ்தென்றுங்
கைலுகந்து தரி தங்கமுடன் வாழ்அரசனைப்பணிய
அரகார் வென்று உகந்து

போற்றி

செஞ்சடையுடையாடய் போற்றி !
செவேறுமய்யா போற்றி!
வஞ்சமே அறுப்பாய் போற்றி !
வானவர் முதலே போற்றி!
அஞ்சன பிடித்தாய் போற்றி !
அங்கியையெடுத்தாய் போற்றி!
கஞ்ச வைதன்று பகடவளே போற்றி போற்றி!

**சிவன் வசனம்**

அகோ வரரும் தேவேந்திர மகராசனோயிங்கே
யெழுந்தருளும்

**காட்சி 11**

பங்கு கொள்வோர் : அக்கினி பகவான்,
வேடமெட்டுபவன், யெமன்,
நிரூதி

இடம் : அக்கினி பகவான் சபை

**அக்கினி பகவான் சபை**

திக்கெல்லாம் புகழும் தென் கீழ் திசைக்கதி காரனான்
தக்கதோர்கபாலசூல் தன்கையிலேந்தி அனபாய்
அக்கினி பகவானுந் தான் அசம் மதில் லேறிக் கொன்று
மைக்கண் வேல் விழி யாளபாகன் வல்லான் சபைக்கி
வந்தார்

**வேடமெட்டுத்தரு**

அக்கினி பகவானும் மெழிலாய் அரன் துதிசெய்யவந்தார்
யிதஅக்கினி பகவானுமெழிலாய் அரன் துதிசெய்ய வந்தார்
மெய்க்கவே அசம் மீதேறி அன்பாக -
விண்ணோர்மகிழ்ந்திடலு நிதம்
முக்கண்ணோனை முறையாய்ப் பணிமுடையோடுமே
உகந்து

மந்த மீதில் மணிமுடி சூடியே - மார்பிலணி
யாரங்கள்ளெங்கி

யெத்திரையெங்கு மெத்தவே சோதி - யிந்திரன் போலாய்
அக்கினி

தென் கிழக்குத் திசைக்கியடுகாரமும் - செய்யுஞ்
கெடுமுடையயித

அன்புள்ளான் அக்கினி பகவானு அகமும் மகிழ்வாக

கைய்யில்ச் சூழ் கபாலமும் மேத்தி கனகவொளிப்
போலே - யித

மெய்யுநந் தோண் வொருகைய்யுங் குளாயா - விபலன்
சபையை மன்னி

**தோத்திர விருத்தம்**

கமலனாம் தேவதன் கானா கா(ர)றணாப் பொருளே
போற்றி!

நமன் நணுகாத தேயா னாரின் (நா)னாயகனே போற்றி!

அமலையாய் அழுவம் பூண்ட அரும்பெருஞ் சுடரே
போற்றி!

சமனு மாவரையில் நின்ற சம்பு நின்தாளே போற்றி!
எமன் வருகிற சபை

கண்டியும் சம்பார் கெஞ்ச சகமத்துள் ளோர்கள் அஞ்ச

வேனடிசேர் அமரர்ரெல்லா மிக மனங்கிலங்கி அஞ்ச
அண்டமும் அகிலமெல்லாம் அதிரந்திடக் கிடாமேலேறி
எண்டிசை புகழும் எமராசனுமித வந்தானே

**எமன் வருகிற தொடையழகு**

தாளம்.. தொந்த..ந்தா. தொந்த... ந்தா.. தோந்தா.. திந்த
தோந்தமிட தரிகிட ... தொந்த.. ந்தா... தொந்த. ந்தா
கனம் பேத்த மெய்யிலங்கப் பணித்தமிழ்ம் பொடி வீச
யின மோத்தொடுத்திருதிச் சுதன் யெமராசன் வந்தான்
வீசும் போத்தக வதனத்தோடு வீறுங் கிடாவெறி
நிசங்க தொடு அணி சத்திட நிதிச்சுதன் வந்தான்
தனத்த தன தனத்தன
தருமைப் புகழ்ல் கோங்கிட தன்கைச் சூலமேத்த
எருமைக்கிடா மீதேறி எமராசனும் வந்தான்
தனத்தன தனத்தன
அரன் மெச்சிட தரை அஞ்சிட அழ்சித்து
கணமுடையர்யான
சிரமிதினில் முடிமின்னவே திகழும் சபை வந்தான்
தாளம்.. தொந்த..ந்தா. தொந்த... ந்தா.. தோந்தா.. திந்த
தோந்தமிட தரிகிட ... தொந்த.. ந்தா... தொந்த. ந்தா

போற்றி விருத்தம்

சொல்லுமுன்னே வல செய்யும் துரித முள் காலகண்டா
வல்லரன் சபைக்கியேகீ வந்திடும் வரைத்தி நீயே
யில்லரத் தருத் கிடாமல் யெமபுரிதன்னில் சிறத்தி
கல்லுரித்துரித்தா போல் காறுவாற செய்குவாயே

வசனம்

அகோரவரரும் பிள்ளாய் காலகண்டானவன் சிவன்
சபைக்கி
பொருவருமளவும் நம்முடன் அணித்திலகறு வாற
பண்ணி
கொன்று யிருபிள்ளாய் அப்படியே நல்ல பாக்கியமய்யா
சுவாமி

எமன் வருகிற சபை

அயம் மால் துதிக்க முன்வோரும் அமரரும் போத்த
பெருகொளி சூழும் பறக்கிரி வாழும் ஒரு
கொப்பனத்திரு மகிழ் சோழன் பார்செழித்துஞ் சபையை
னாடிகணபதி, அரசு கிண்கிணியும் கலகலண்டதிர
சிகவும், தரை புகழர சர மேய்த்திட மிக நடனஞ்
செய்திரு பரனான்கு அமரருக்கு முன்னோ னாம் கணபதி
சிலம் விளங்க புவி மிக தினம் வளந்தோங்க

ஆலகால முடை அண்ணல் சுதனும் மிக
சால மீதில் கண்டாம் சம்பிறம்தாகவே கணபதி வந்தார்

**சுப்பிரமணியர் சபை**

அமரர்களிருக்கம் திறக்க அன்னை கை அயிலும் வாங்கி
சமர் செய்து அசுர தன்னை சாடியேனாவன்ற முறத்தி
குமரனு மயிலிலேறிக் கோழியைக் கொடியாக கொண்டு
யிமயவர் சபைக்கி அனபாய் எழில் போற் யிதவந்தாரே

தொடையு

வந்தார் சுப்பிரமணியரும் மயில் மீதிலேறி
வந்தார் சுப்பிரமணியரும் வந்தார் சுப்பிரமணியர்
மயில் வாகனக் கடனே வந்தார், சரத்தில் வீர வேலு மிலங்க
யிதோ வந்தார்

எமன் சிவன் கொலு வுருபோந்தி
சடுடென்னலே அகில மதிரவே கிரிமிலிருத்த
கேழ்வியுள் அமரர் அதிர்ந்த ஓடவே
நடுநடுங்கிய யெவரும் யொதுங்கவே
நமனாருமிக நண்பன் சபைக்கி அனபாய்த் தோனினான்
வன்னமா முடி சென்னில்ச் சூடியே மங்குலம்போலே
வளருமெனில் பொன் சங்கி பூடியே
அன்னில் சேரும் தன படைக்களோடுமே அரனாம்

**சபைக்கி**

அன்புடன் மகிழ்ந்தே அழகாத தோணினார்

கைய்யிலச் சூலமும் பாசக் கயறுமாய் கருப்பொளி போலே

கிடாமீதேறி தேர்கவகலென்னவே

அய்யமுடனே அரனார் சபைக்கிதோ ஆதபன்சுதன்

அனவர்புகழ் அழகாத தோணினான்

நீண்ட முக்குசாண் நெருப்புப் பறக்கவே

நிலிகண்டுமே நெஞ்சு திடுக்கெடஞ்சி ஒதுங்கவே

தாண்டவம் புரிந்தி சரசபைக்கிதோ தருமம் ராசனும்

தர்ம மாடமார் அழகாத தோணினான்

**போற்றி விருத்தம்**

பணிமதிச்சடையாய் போற்றி !

பரசு மானுடையா போற்றி!

கனி உரிதரித்தாய் போற்றி !

காமனைக் கடிந்தாய் போற்றி!

திணிதனைப் படைத்தாய் போற்றி !

திருபுரத்கனா போற்றி!

மணி முடியுகந்தாய் போற்றி !

மகா தேவோ போற்றி! போற்றி!

சபை

மலைகளு மரமும் விண்ணு மண்ணுமே அதிரயின்று

தலையினில் மூடியும் சூட்டி தகதகடேறிக்க மேலும்

கலைகளும் வொளிகள் துன்ன கைய்யில் வாள் தெண்டும்

ஒரி

பிலமுடன் நீருதி தானும் பிஞ்சகன் சகையில் வந்தான்

நீருதி வர்ற தரு

நீமலன் சபைக்கிதோ அமலையாகவே நீருதி வந்துமே

தோணினான்

காமலக கண்ணனும் அயனும் கீழ்ந்திடக் கனத்த

பூதமேபேறியே

பகுதி தெளியேன் - சித்தர் முடி பின்ன படலை மார்

இதுனனவே

குருதி போல மெய்யூ முருகும் விசவே - குவளை

ரெண்டழல் சிந்தவே

தன்ன தன தன

கண்ட கையில்ப் பிடித்தேண்டும் வாளுடன்

கடக முதுகினில்த் தோனவே

அண்டர்பணி சிவன் தன்னைப் போத்தவே

அகில மதிந்திடயேழிலுடன்

புலியும் கேவிகளும் திரஉரமுடன்

பூத மீதினிலேறியே

அலியும் சுடர்தன்னை தூண்டிட்டாய் போலே

ஆக்கிற மாகவே அழகுடன்

நீருதி சிவனுக்கு போற்றி!

அரவணி பாதாய் போற்றி!

அறுகு தோலணிந் தாய்போற்றி!

உரம்மெய்யிலணிந்தாய் போற்றி!

உறவானு யகனே போற்றி!

சீர்மிகு மந்தி திங்கள் திலங்க

வேலணிந்தாய் போற்றி!

காமத்தில் மழுமான கொண்ட

கரத்தனே போற்றி போற்றி!

**வசனம்**

நிதி ராசனே யிங்கே யெழுந்தருளும் பெருமைசேர் புவி மனுக்கர் புகழ்ந்துமே நீதமுங் போத்தகருமை யாம் கறு வினையான் கமண்டலம் கையிலேந்தி

## காட்சி 12

பங்கு கொள்வோர் - வருணன் வாயு பகவான், குபேரன், சனி பகவான்

**வருணன் சபை வர்ற**

அறுணன் போல் புரைகாசிக்க அகந்தனில் பணியும் பூண்டு வறுணனும் முதளையேறி வானவன சபை வந்தானே

**வருணன் வர்ற தரு**

வருண ராசனும் தோணினான், அரன் சபைக்கி வருண ராசனுந் தோணிணான் வருண
ராசன் தோணினான் வாகையுடைய யுடுத்தி
கருணாகிடாஷ சந் தரு கங்காதரனே காப
காசாம்பு மேனியுடையூ - அதுக்கிசைந்த - காருவாகன நடையூ
வாசமலர்முடைய்யூ - வானுயந்த கோடையூ
பாசமுள்ள படையூ பாவியாடும் துடைமர் வருண
அஷ்த்திரி பிடித்த வாசவன்அவர்க்குள்ளான அதிக பிலவனுமவன்
கத்த மேகத் தூதிபன் சகல உயிர்க்குமவன்
சித்த மகிழுங் கவன் தினமு பொழிவானவன் - வருணன்
குறிகி குறிகி நடந்து வருண ராசன் கோமுதனை மேலேமந்து
யேறியூ பணியணிந்து யெழிலாய் மனமுகந்து அருங்ஞ்சர மிக

உகந்து ஆணவருடனே வந்து - வருணன்

கையில் கமண்டலமேந்தி அழுதுத்தும் கனக

**சபைக்குமுந்தியே**

மெய்யூ மேக போலுந்தி வெகுவா மகிழ்ந் போந்தி

அய்யன் சபையில் னத்தி அமந்த வற

வருணன் சிவனாறி போற்றி!

அய்யனே அரனே போற்றி!

அறுகு தோலணிந்தாயேப் போற்றி!

மெய்யனே வீமனாய் போற்றி!

விண்ணவர்க்கருளே போற்றி!

பைபறவணிந்தாய் போற்றி!

பாசுமானுடையாப் போற்றி!

மைவிழி பாகா போற்றி!

வந்தேன்னை ஆள்வாய்ப் போற்றி!

**வசனம்**

அகோவரரும் வருண ராசனே யிங்கே யெழுந்தருளும்

**வாயு பகவான்**

(ஈ)யீயத்தை பணியாப் பூன்று யிருகையில் மழுமரனேந்தி

சேயனை மகிழ்ந்த யீண்ட சிவனாரே போத்த வென்று

காயவெண் மேகம் போலக் கலையின் மேலேறிக்கொண்டு

வாயு பகவானும் தானும் மகாசபை தோணினாரே

தொடையூ

வந்தாரே வாயு பகவான் வந்தாரே

வந்தார் வாயுபகவான் மகாதேவர் தனை காண

சுந்தரக் கலையேறி சொகுசுடன் சுகமான

மலையூக கேவியூமாக மன்னு விண்ணு மொண்ணாக

கலையூகனை போலேத் தலையில் முடிச்சு உலாச வந்தரே
வாயி

கத்த சாகரம் மொத்த தசையப் பூமியு மெத்த

சித்தர் மனமும்நீத்த திகைத்து சபையில் நீத்த வந்தாரே

கைய்யில் தெண்டுமே கொண்டு மெல மெய்யுமேகம்
பொலிண்டு

அய்யன் சபையில் தோண்டு அணபாய
பண்ணவேவெண்டு வந்தாரே

குண்டு மலை அதிர கண்டு மன்னர் யெதிர

யிண்டு மனமுதிரக் கொன்று சபையேதிர - வந்தாரே வாயு

சூறாவெளியாகவே - பாராள மன்னரோதவே

ஆறாக் கனலாகவே மாறாப் புகழாகவே வந்தாரே
வாயு பகவான்

போற்றி

நஞ்சணி கண்டார் போற்றி!

நாகமேலணிந்தாய் போற்றி!

வஞ்சமே யறுப்பாய் போற்றி!

வயர தோலணிந்தாய் போற்றி!

மிஞ்சியத் தகழாய் போற்றி!

வெண்ப பொலிவுடையாய் போற்றி!

அஞ்சலென்டனையாள் போற்றி!

அரகள சிவனே போற்றி!

குபேரன் வர்ற சபை

அடவமா பெருத்தமன்னர் அகமகிழ்ந்தினமு போத்தும்

வடதிசைத் தவன் னான் மன்னவன் குபேரன் ராசன்

திரமுடன் பரி மேலேறி தேவர்கள் மிகவும் காண

விடையேறு தூதர்னாதன் வினை வினவவும்

யித வந்தாரே

குபேரன் வர்ற தொடையில்

வடதிசைத் தலைவனும் திபன பரிமேலறி வந்தான்

சுந்தரமாகவே

அரன் சபைக்கி வந்தான் - சுந்தரமாகவே

தடங் கொண்ட மார் ரெல்லா தகிடங் கொண்டு சூழவே

தரையில் வாழுமனுவெல்லாம் தனவானென்று ஓதவே

வடதிசை

அடையவர் புடைசூழ் குடையூ மேலனிழல் தாழ்

ஆழ்காயிந்திரன் போலே அணியூமே யொளியிழம் -
வடதிசை

தடங் மொங்கு மன்னான் சபையில் யிடங் கொன்றும் -
முக்திடவே

கயவோ வருமுன்னாக கண்டு கான தொழவே - வடதிசை

திசையெட்டும் புகழ் மெய்யின் யிசையே முடங்கிகள்
தோன்

சிரமேல் பணிந்த முடிமெல்லா ஒளிறுன்ன வடதிசை

கேஷக முகன் தனை பெத்தஅந்தானை யூங்கான்

கெடகம் உடைவாள் கையில் பளபளன்னவே மின்ன -
வடதிசை

அமரர் முனிவர் தேவர் அரிஅயன மாலுமாரனு மனமகிழ்
அனலி மதியூச் சோர்

உமாபதி தனில் யெங்கும் மொளி பரவி உலாவ

உலகு பதினாலுக்கும் மொருவன் குபேரன்னாதும்
வடதிசை

குபேரன் ராசன் சிவன்

போனனின் மாவரையாய் போற்றி!

போகியர் பரனா போற்றி!

மின்னலே முடித்தாய் போற்றி!

வேழுமுமுனரிதா போற்றி!
கன்னலை படைத்தாய்ப் போற்றி!
கண்ணுதலயானே போற்றி!
யென்னையே ரெஷ்சித்தாளும் பியரவனே
போற்றி போற்றி!

**வசனம்**

அகோரவரும் குபேர ராசனே யிங்கே யெழுந்தருளும்

**சனி பகவான் வர்ற சபை**

முனிவரும் மார்தேவர் முகத்தயனுமாலும்
கனிஉன்னி தழு போத்தும் கண்ணுதலயோனெக்கான்
புனிதன்போல்லங்கே செய்து புகழ்ந்துமே காகமேறி
சனியனும் அரண்வாழ்நல்ல சபையினி தோணினாரே

**சனியன் வர்ற தொடையம்**

யிசன் சபைக்கி சனிபகவான் யிதவந்தார் சுந்தரரா
தேசம் பொறுங்காக வாகனமேறி திசையெட்டுமே புகழு
நல்ல
வாசம் தரும் ஈசன் மாசபையிலுள்ள வானவரு மகிழ
காகமேலெடு கருப்பொளி போல கனமுடியுசூட்டி நிதம்
னாகபணி புன்னை கனமன சபைக்கி நலமா
மண்ணாடியின்

கையினிச் சூலமும் மெய்யூக கறுப்பாகன்

வடிவுந்தோன் யின்று

அய்யன் சபையில் மந்தர்மாகள் அனபாயெதிரக்கான்

மாலயன் யிந்திரன் வானோர்முனிவரும்

வந்தனமே செய்யவே நிதம்

ஞாலம் புகழ் ஈசனர் சபைக்கி கேகி

நலம்புறவே பய்ய வேயீசன்

மண்ணு விண்ணுக்கு மனுவுக்கு தேவர்

வல்லவன் தானாகி நிதம்

அண்ணல் சேருமானார்ரே பணிய அகமுமிகவாகி யிசன்

அண்டர் முதலான சண்டனடிங்கி அகண்டு அப்பால்

வோடவும் - வாம்

கொண்டு பகவானும் யிசன் சபைக்கி குணமாகவே

தோணினார் யீசன்

(ந)னஞ்சயணி கண்டாய் போற்றி!

(நா)னால் மறைப்பொருளே போற்றி!

மஞ்சியே சுடரே போற்றி!

வெள்ளி மா வரையா போற்றி!

சனியன் சிவனுக்கு போற்றி!

கொஞ்சியே பாதாய் போற்றி!

கோவேறும்மய்யா போற்றி!
வஞ்சமே அறுப்பாய்ப் போற்றி!
வமரகர் தேவர் அடியேன் போற்றி!
அகோரவரும் சனி பகவானே யிங்கேயெழுந்தருளும்

**மன்மதன் வர்ற சபை**

கரியுரியோ வினை புஷ்பக் கனையினால்லெயித போது
யெரிப்பூச ரூப மான யியல் (ர)றதி கணவன் காமன்
பரிவுடன் அரனைப் போத்த பணிகளுமிகவே பூண்டு
அரியின் மேலேறி யிண்டு அய்கனையுடன் வந்தானே

**மன்மதன் வர்ற தொடையூ**

கரும்பு விலக்கனையோடும் உருப்பேதகமுமான
காமனுந் தோணினானே கிள்ளை மீதில்
காமனுந்தோணினானே
மாலுக்கு உருமையுள்ள மகனான் மன்மதன்
மறதேவர்தனைப் போத்த அரசன் சாலமுன் நீல்லாமல்
மறவா துதி செய்ய சம்பிர மாதர கலி தோல்
கன்னவில் சிலை புஷ்பகனை கொண்டு பொழில் மேனி
கனபச்சை நிறமாகவே நல்ல வன்னமுடிசிரசில்
மின்ன மகாக்கொடி வானுலரானி போவாவே கருப்பு
நீங்கள் குடை நிகழ்த்தும் பாங்கள் மலர்கள்

தூவ தேவர்கள் மகிழ்ந்தேத்த யிப்ப
அங்கமுடனே சிவனாரை துதி கன செய்ய
அகமு மகிழ்வாக கரும்பு வில்களைக் கொண்டு
கடல் முரசதிரேவேக குயிகள் காளாமுத்
கணயெழிலாக வே தான் கையில்
மண்டலதாழம் பூவாளம் - காமிதி
மிக்கதேமான் வந்தான் மகிழாகவே - கரும்பு
நங்கை ரதிக்கிசைந்தது உங்கள் மன்மதனென்று
தூவமெங்குமே புகல - யிப்
சங்கரனு வு செய்யொளி சபைதனில் தானே எழிலாகவே
தான் - பருப்பு

மன்மதன் போற்றி

பொறை கொண்டுங் கறைக்கொண்டுங் மறவாமல்
நிறை கொன்றுங் புகழே கொண்டுங்
மறைக் கொண்டு உலகு உன்னவலுக் கொண்டு -
நிண்டவனே மல நாள் போற்றி
முறைக் கொண்டு அனு தினமும் முயங்கு
மலர்றோடு னானுன் முன்னி நின்று
அறை கொண்டு வ;நதேன்னை மறவாமல
அனுதினமும் அகத்துன் வயப்பா

**வயிரவன் வர்ர சபை**

தயிரியதுடனே தேவலோகமும் தரையும் அனபாய
பயிலுமாயி ரத தேட்டண்டம பாங்குடன் காவல் பூண்ட
வயிரவர் தான் சுவரன் வாகன மீதிலேறி
கயிலயஞ் கிரி வாழி சன் கனகசபைதனில் வந்தோரே

**வயிரவன் வர்ர தரு**

வயிரவர் வந்தாரென சுவரன் மேல் வயிரவர் வந்தனரே
வயிரவர் வந்தார் அரகள யேனடி கயிலியங்கயீா கிடு
கிடன்னவே உருவோடு
அமரரும் முனிவரும் யெதிர் படமனதோடும்
சமர்செய்யும் அருவலருளங்களும் தயங்கி
சங்கரன் அருள்பெற - யிங்கிதத்துடனித
பொங்கொளி முடிசிர மீதினில்ப் புனைந்தித வயிரவா
மெய்களும் குரு திகழ் விழிகளும் பொறியேழ்
கையதனிச் சூல் கபாலமும் கொண்டிடத
கண்ணாதல தனையிரு காங்குவித்தே ததிட
கேன்னமுள்சபையினில் தேவர்கள் மகிழ்ந்திட வயிரவா

வயிரவன் சிவனுக்கு போற்றி!
யந்தியை யெரித்தாய் போற்றி!

யெமனை உதைத்தாய் போற்றி!

பருதி பல்லுரைத்தாய் போற்றி!

பங்கயன் சிரம் கொய்தாய்போற்றி!

குருதி மெய்யோனே போற்றி!

குருக்கணத்தழும்பா போற்றி!

கருதினேன் பாதம் போற்றி!

கண்ணாத்தலானே போற்றி!

**சிவன் வசனம்**

அகோரவரும் வயிர ராசனே யிங்கே யெழுந்தருளும்

**காட்சி 13**

பங்கு கொள்வோர் - நாரதர், சப்த ரிஷிகள், பஞ்ச கன்னியர், சிவன்

நாரதர் வர்ற சபை

கையினி வீனை தாங்கி கனத்த குண்டலமும் மோங்கி

மெய்யினில் துளபமாலை மின்ன வேணும் மஞ்சாத்தி

சையாகை மொழிகள் பேசி சங்கரன் சபைக்கி அனபாய

வைய்யகம் புகழுனாரதர் மாமுனி தோணினாரே

நாரத மாமுனி வந்தார் நல்ல னாகாபரந்தன்னை

நரசபைனாடி நாரத மாமுனி வந்தார்

**நாரதர் வர்ர தரு**

சிளகணும் மணிந்து பெம் செல்வந்தரு அரனுரை புகழ்ந்து
(நா)னாரத மாமுனி வந்தார்
காதினில் குண்டல மாட ஒரு கையில் வளைகல்
கலகலண்டாட ஆதி சிவனை உகந்து னாவில்
அரகளவென்று அகமு மகிழ்ந்
மாரில் முப்புரினாலும் மாட மெய்யில்
மண்ட புனைந்து சிகழி முடித்து
ஆரம் பொட்டு னாதலிட்டு யிப்ப
அமரர் மகிழவே ஆதி ரடித்தடி

**சப்தரிஷிகள் வர்ற சபை**

காசிபா பாத்து வாசா கனம் பெறும் விசுவாமித்திரர்
மாசிலா வசிஷ்ட்டர் யிசர் மகாகேவதுமா பரதியர்
நேசமா யிவர்கள் கூடி நிறை மொழி மிகவும் பேசி
தேசிகன் சபைக்கி அனபாய ரிஷிகளு செழிக்

**சப்தரிஷிகள் வர்ற தொடை**

சப்தரிஷிகளொணாய் தானுமே கூடி அரன் சபைக்கி
சபைக்கி எழிலாகவே தானித வந்தார்
மெத்த வெண் பொலியாரம் மெய்யில்ப் பூசியே அரன்
மேய்க்கத் தவ மிக்கச் செய்யு விந்தரெழிலார்

சிரத்தில் குண்டலமிட்டுச் சீராகவே தான் கையில்

தேன்னாம் காவிமுன்னும் மாகா செணறுடனித வந்தார்

மார்பில் அறுத்திளஷ்ச வடமாலையுமாட தோளில்

மான் தோல் புலித் தோலுடனே மாதவரிதே

கையில் சிவ மாலையோடும் கமண்டலமேந்தி மெய்யில்

கமழும் கல்விப் புகழும் பேசி கவினாகயிதோ

சப்தரிஷிகள் சிவனுக்கு போற்றி!

ஆதியே அரனே போற்றி!

அகண்ட பூறணனே போற்றி!

பாதியே பரனே போற்றி!

பங்கய பாதாய் போற்றி!

நிரமல னாதாய்ப் போற்றி!

உளதியப் பொறுளே போற்றி!

உன் பதம் மிகவும் போற்றி!

சப்தரிஷிகள் சிவன் வசனம்

ஆகோவரரும் சப்தரிஷிகளே யிங்கே யெழுந்தருளும்

பஞ்ச கன்னி வர்ற சபை

மென் கையுறுவைறம்மை மெய்பித்து சுத்த தலியும்
சோர்ந்து

ஆனதுலொத்து மையுடி கூட அஞ்சுபேர் பஞ்ச கன்னி

நானமும் புனுகு பூசி நன் கலன் மிகவே பூண்டு
தேன்மலர் துடைபூண்டோங்கும் சிவன் சபை தனில்
வந்தாளே

**பஞ்ச கன்னி வர்ற தரு**

நம்மை உறு வைத்து ளொத்துமை மென்கைற
திக்கினையாம்
பிஞ்சி கத்தலியுங்குடி நம்மை யாரிது தோணினாள்
கொண்டையில் அகம் குலுங்க கூழையிடுங் கூழ்
பணிகளும் இயங்க
அண்டாமாளரும் கண்டு அதிசயிக்க கண்டன
தனைவைத்ததைத்த சங்கர சபைக்கு யிதோ
மதியை பழித்த முகமும் தகதகென்ன
மஞ்சல ழகுங் குணம்
அதிக உரூபம் படைத்த அமரர் பதி தலவன்
யெதிரே நீன்று மயங்க யீசன் சபைனாடி
வல்லிக்கொடி போல் இடையூ சாய்ந்தன் டையும்
வறணமிலங்கு மிடையூம் நல்ல பணி அணிந்து
ரதி தேவிக்கினைப் போலே
வல்லவன் சபைனாடி வந்தோனடணம்ஞ் செய்ய
ரெமைபரி

## காட்சி 14

பங்கு கொள்வோர்

சிவன் தேவர்கள், நாரதர், விஷ்ணு, இராமர்

### திரு கூட்டங்கூடுகிற போது

முரசதிர முப்பது முக்கோடி தேவரும் (முனிவர்
ரொரு பால் சூழலே)
முடவனரி அருகன் யன்புடையிட்டு அரிகில் மிக
முறுவல் செய்து போத்தலே
அரவு மிக ஓசையிட ஏழ்கடலுமோடுபட
அரம்பையர்கள் மிக வாடவே
அந்தணர்கள் ஒரு கோடி துந்துமி முழக்கிமிடும்
அவர்கள் ஒரு பால் சூழவே
யிரதி மிகஒளிவாக ஐஞ்சுனையுடன் பக்க
மிருந்து கரங்குவித்து ஓதவே
யீரேழ் லோகமு அடிமுடிவு காட்டாமல்
யிருந்த பானம் பாகவே
உரகபணி பூண்டு மிகயிரு புறமுங்
குழவி மகிழ் மையுமொரு மங்காகவோ
உவனையிலிருந்தானும் சோழன் புகழ்
உணரவே உறுவைர சபை கூட்டினார்கள்

**சிவன் தேவர்களுக்கு**

மலர்லயன் அருகனிந்திள மறலியே வரனோர் னம்பாய்
ஞாலம் மீதுழலுந் தேவர் னான் மறை முனியே கேளாய்
பூலோகம் அரசாள நீதி வெந்தரில்ப் புணிய வாளன்
சாலமுயெனக்கு நன்றுய சாத்துவீர் சாத்துவீரே

**நாரதர் சிவனுக்கு**

ஆதியே அரனே யிந்த அவனியாள் அரசா தன்னில்
உளதிய மிகுத்து வாழும் ஒரு வானுருரில் நல்ல
வீதிக் ஆயிரப் போர் வரனோர் மிக மனம் கறிக்குஞ்
சோழன்
நீதியை ஒருவராறு நிகழ்ந்தவு ஒண்ணுதய்யா

**சிவன் நாரதர்க்கு**

நிகழ் தருதரமெண்ட னொருதர் வானோடும்
நெறியோடும் மிக்ககேளும் நீதிச் சோழன்
புகழ்ந்து மெந்தன் அடியார்கள் தன்னைக் கண்டால்
புகழ்ந்து அழைத்த சினத்தில் வயத்துப போத்தி செய்து
மதித்த மன்னர் மந்திரித்ததினால் லென்னை
விரும்பி வரும்
முன்னவனும் வீதியளமந்து பகரதகுமென் உவனையினில்
அனபா யனாலாம் பதிதவி அளித்திட மாலை பகரவீரோ

**சிவன் விஷ்ணு**

பதவ மிக அளிக்க வெண்ணால் பரிந்து சாத்தும

பரப்பொருளே பக்தர் விமலனே கன்னால் சிதமிகு

நான்முக வரமுன்னாளில் நிர்க்க திஷ்டிதத்தை

அறிந்தவர்க்கு வீரேலங்க

சுதன் மிகவு அளிக்க வேண்டால் சதமாக

துய் பரமேத்த வெண்றிலயே றேண்டில்லை

யித மிரும் பாரதனை படைத்த யீசா உந்தன்

யென்னத வினாடியவர் துயிதங்கிசே

**சிவன் இராமர்க்கு**

விமலாயனே ஒரு தேதிவர கேளாய்

வையகத்தில் வாழுமாகா மன்னர் தன்னை

நலமிகு மாரூரில்லொரு சோழனின்று

னாட்டில் கடங்மோங்க மனினாடிககோன்

நலமதனில் பிலிபசு எம் சரியானின்று

சலங்துடிக்க அரசாளுவர் தகைமை போலும்

நிலைமையுடன் தெரிய யென்று நிருமிப்போ

கெஞ்சில மறையாமலிதை நிகத்து வீரோ

**இராமர் விபீஷணனுக்கு**

யியம்ப மிக யெண்டிசை சேர் யீசாப் போற்றி!

யீரேம் புவனமளித்திறவாய்ப் போற்றி!

அயம் பெரிகி பாய்ந்த வரார் சோழனாட்டில்
அரிய தொண்ணாத அறுவரில் ஆரூர் சோழன்
பயமிகவே பத்தியுமாய் பாரிந்தி
படைத்தவனான் பாலனுண்டு பதவியாளன்
நயமிகும் பொற்ப்பாதமிதில் கோப மாயின்று
யானுரைத்தேன் தப்பாது நனதன செய்வீர்

**சிவன் இராமருக்கு**

அர்ப்புதாய் சாத்து மயனாரே கேளீர்
அறைமிகுத்து வாழும் ஆடூரில் நல்ல
விரப் பன்முளக் சோழன் வயதறிந்து நல்கும்
விரித்த முறையின்ன தேன்று விருப்பமாக
செப்பரிய தேவர் முனி அமரர் முன் பாய்
தீர்க்கமுடன் எத்தனுக்கு திலத்தமாக
தப்பிதமாய உரையாமல் சங்கமீதில்
சாத்துவீர் மனமுகந்து சாத்துவீரே

**இராமர் சிவனுக்கு**

சரியாக சாத்திசைசேர் சங்கங்கள் உனது கைமிகும்
பொற்பாதமதில் தமியேனிண்டு
பரிவாக பணி தடியேன் பகர கேளீர்
பாரிலுள்ள மனுகுறிப்பு பரிந்தெழுது நல்ல.

காட்சி 15

பங்குகொள்வோர் - சித்திர புத்திரன், இராமர், சிவன்,
தேவர், விஷ்ணு, எமன், சனியன்

**சித்திர புத்திரன் சபை**

அரிதான சித்திர புத்திரந் தன்னை யிப்போ
அழைத்து வர தன் வயதறிந்து அங்கமாக
உரிதான படியுரைப்பேன் தப்பாதய்யா
உளமகிழ்ந்து அடியேனை உகந்தாளக் கோவீர்
பத்தர் தன் தவத்துக்கு கனபாய் பதவியுமளிக்கும் யீசா
சித்தமே மகிழ்ஞ் சித்திர புத்திர வந்தாரே

**சித்திர புத்திர தரு**

சித்திர புத்திர மெத்த யெழிலா சிவன் சபை வந்தோரே
நெத்தியிலனிறு வீதி கடைய மு நிலவுபோல விளங்கு - நல்ல
புத்திடங் கொண்ட சபைனாடியே சித்திர புத்திர வந்தாரே
மத்த மதிலார்ப பொட்டு மருதிறாஷ்ச வடமுப்புரி பூண்டு

வேறு

போத்த போடு அரன் சபைக்கிதே சித்திர புத்திரவந்தாரே
ஆதி சிவன் மாலயனாமனுக்கு அமைத்தபடியே எழுதி மிக
போதா வானவர் தேவர் மகிழ் சித்திர புத்திரர் வந்தாரே

மாசி மார்பணியும் மானார் மலர் பாதம் போத்தி செய்து -
நல்ல

பூசுரர் வானவர் தேவர் மகிழ் சித்திர புத்திர வந்தாரே

சித்திர புத்திரர் மெத்தயெழிலாய் சிவன் சபை வந்தாரே

**இராமர்க்கு சித்திரபுத்திரன்**

எந்தையே பரனே போற்றி!

யெவ்வுயிர்க்குயிரேப் போற்றி!

தந்தையூ தாயுமான சறுவதாய் பரனே போற்றி!

சிந்தையில் மகிழ்ந்து தங்கள் திருச்சபை வரவே கொணர

விந்தையை அடியேனுக்கு விரித்துரை சாத்துவீரே

**இராமர்**

சாத்துவீரென்று சைசேர் சித்திரபுத்திரி தனகுஞ்சேர்

சோழன் வயதன் வினையிப்போ காத்திஞ் சூழலடு

மனக்குறிப்பில் அன்பாய

கண்டெழுதி வைத்தபடி கயவோர் நன்றாய் போற்றி

செய்யும் யீசருக்கு புகழ்ந்து சாத்த

புருவமுடி விழிக்கு முன்னே புதுமைபோல பாத்து நீர்

யெந்தனுக்கு பருவாயிப்போ

பகருவீர் சறுக்கில் மிக பகருவீரே

**சித்திர புத்திரன் சொல்**

யென்றிசையும் நிதம் போத்தும் மயனே கேளிச்

யீசர் மகிழ்ந்தே அளித்த யெனர்பத்துரெண்டு

செண்ட வயதறுத்தாறாக சுதிப்போ

செல்வனுன்டு சோழன் யினிதிரையென ஆள யின்று

புதினாறு மூன்று அடியென் அன்னாள்

யெழுதி வைத்தபடி கணக்கையெடுத்து பாற்க்கில்

**இராமர் சிவனுக்கு**

கண்டபடி யானுரைத்தேன் தப்பாதிப்போ

கருத்துகந்து யெனையாள கூட்ட வீரய்யா

கறை மிடைனுடையாய் போற்றி

கையில் கங்காளர் போற்றி

மறை முதல்ப் பொருளே

சோழன் வயதினில் பதினாறாண்டு

குறைவில்லை பாலனான்று கூறினார் சித்திரபுத்திரன்

புறை அரிதருளே சித்தம் புகழ்ந்தென்னை ஆள் வீரய்யா

**சிவன் தேவர்களுக்கு**

சித்தம் வைத்தாள்வீர்ரென்று செப்புனான் முகனே மாலே

மத்த நல்வானோநெடுகள் மைந்தன் மேல் னாடி வந்த

கொத்தவன் மகிழ்யிப்போ துழவியயும் அளிப்போம்

சோழன்

பத்தியை மனஞ்சேர்த்திக்க பகருவீர் மல்ல மீதில்

இராமர் விஷ்ணு சிவனாறி

சோதிக்க வீகா ளாங்கள் சொல்லவுத்துமோஅந்த

நீதியுள சோழனுக்கு நீதினை பகர ளெண்ணாது

சிவன் போது

பூதலமிகவி போத்தும் பூனை மீரெழ்வார் ரதும்

ஆதியே தங்கள் சித்தம் ஆம்படி செய்வீரய்யா

பொது மாலயன் வானோ புவி மகிழ் சோழனுக்கு

னாத்திசை மகிழ் பாலன் நளித்த பின் மணம் சோதிக்க

யெத்த முளம் மாகோவாய் - யெமனாம் செங்கண்ணாக

னெத்தியுள் பாலன் முலம் நீதியு பதியலாமே

சிவன் எமனுக்கு

எமனே புகல் கேளாய்! யெழி தரு பூலோகத்தில்

பூமியோர் அறிய செங்கண்ணாக பொன் பின்பு

தாமமாருடையான் சோழன் தன் மகன் மனம் சோதிக்க

னாமுமே பசுறா வரறோந் நடந்திடாயே

சிவன் பொது

தேவலோகத்திலுள்ள தேவர்களிரு கேளீர்

பூலோகத்திலாரும் புதுமை யென்டறியத்தானே

தூாவமாய் யொத்தசோழன் தன் மகன் மனம் சோதிக்க

யாவரும் பசுவா வேழமெடுத்து கொண்டேன்வேணும்

**சிவன் சனியனுக்கு**

சனியனே புகல கேளாய் தடையற நீயுமேகி
யினிய சொல் சோழன் னாட்டில் யிறங்கி பிராமணனைப்
போலே
கனிவுடன் வளத்த கண்ணும் பசுமே கானுமெண்டு
பணில்மர நீன்று சோழன் பகர்வதை அறிந்து வாரீர்

**தேவர்மேந்தும்**

அகமகிழ்ந்திருந்துப் போத்தும் - அமரரே உரை தப்பாமல்
மகவாம் வாங்கள் சன வருமுன்னே னாமுமிப்போ
புகலு றேன்னோ மாச்சு பூசைகள் செய்ய வேணும்
சகலரும் ஆச்சிர மத்துக் கேதுவீர அமரரும்

**சபைக்கானந்தரு**

முனிவரும் தேவரும் முடிகி நடந்தனரே
புனிதன் சபையை நீக்கி புகழ்ந்து ஆச்சிரமத்துக்கு
முனிவரும் தேவரும் முடித்தி அண்டரும் அமரரும்
அரன் சபை நீங்கியே மண்டக மன்மதனைக்கே
நடந்தாரே

**சபை**

தேவர்கள் திருகூட்டங்கள் சிறப்புடனான பின்பு ஆவலாம்
சோழ ராசன் அவனியாள் மைந்தன் வேண்டி

தாவமாய் ஆருளன் தன் சன்னதி தன்னை னாடி
பாவையுந்தானுமாக பரிவுடன் தோணினாரே

**சாகோலுவு வர்ற தரு**

வண்ணமாய்த் திருனாமணிந்து வலது கையில்
சிவமாலையுகந்து
அன்னலான் ஆருளனை பணிய அருவையோடும
சோழராசன்
வந்தாரே மைந்தன் வேணுமென்றே மனதெண்ணி
மகிழ்ந்து யீசா மலர் பாதம் உன்னி சேர்ந்த பாரியுந்தானு
மாயெண்ணி
சோழ ராசன் மிகவு வந்தாரே அறுபத்தாறு வயதான பின்பு
அரனைப் போற்றி பகவா வாங்க
உறுவா போத்தும் தியாகேச கோவில் உகந்து
உகந்து ராசன் மிகவும் வந்தாரே
அண்டளரும் அடிபணிந்தேத்த அருளனை
அகமந்தணிலுன்னி கோன்று ராசனு தேரியு
மன்னலாய கோவிலுக்கே மிகவும் வந்தாரே.

## துணை நூற்பட்டியல்


1. தமிழ் இலக்கிய வரலாறு -மு. அருணாசலம்

2. நாடக தோற்றமும் வளர்ச்சியும் - என்.ஏ. பெருமாள்

3. அச்சும் பதிப்பும் - ஆ. விநாயகமூர்த்தி

4. சுவடியியல் - பூ. சுப்பிரமணியன்

5. உதிரும் மலர்கள் - டாக்டர் ஜி, சாமுவெல்சன்

6. தாமோதரம் -சி.வை. தாமோதரம் பிள்ளை

7. என் சரித்திரம் - உ.வே. சாமிநாதையர்

8. காவியக் காலம் - எஸ். வையாபுரிப்பிள்ளை

தேரேர்ந்த நாடகம்



